இளம்பரிதி

முத்தமிழ் விழா சிறப்பு மலர்-2013



வெளியீடு
கலாசாரப்பேரவை,
பிரதேச செயலகம்,
கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

இளம் பரிதி - 2013

கோறளைப்பற்று பிரதேசப் பாரம்பரியம்

நோக்கு

எமது கலாசார வரலாற்றுப் பாரம்பரியம், எமது இருப்பின் வெளிப்பாடு அதனை நாம் எமது நாளைய சந்ததிக்கு கையளிப்போம்.

வெளியீடு

கலாசாரப்பேரவை,
பிரதேச செயலகம்,
வாழைச்சேனை.

கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசார பேரவை

இளம் பரிதி 2013

தலைவர்
திருமதி.தெ.தினேஷ்
(பிரதேச செயலாளர்).

உப தலைவர்கள்

திரு.எஸ்.பிரபாகரன்
(உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)
ஜனாப்.எஸ்.ஏ.ரஹீம்
(நிர்வாக உத்தியோகத்தர்)
திருமதி.ச.பிரணவசோதி
(பிரதித்திட்டப்பணிப்பாளர்)
ஜனாப் S.H நௌபீக்
(கணக்காளர்)

இணைப்பாளர்
திரு.கே.எஸ்.ஆர்.சிவகுமார்
(கலாசார உத்தியோகத்தர்)

நிதிக்குழு
கிராம சேவை உத்தியோகத்தர்கள்
சமூர்த்தி உத்தியோகத்தர்கள்
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
இந்து கலாசார உத்தியோகத்தர்
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

செயலாளர்
செல்வி.ஸ்கொலஸ்டிகாஅமலினி நந்தகுமார்
(கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

உப செயலாளர்
செல்வி.பொ சசிகலா
(இந்து கலாசார உத்தியோகத்தர்)

பொருளாளர்
திரு.கு.ரவிச்சந்திரன்
(முகாமைத்துவ உதவியாளளர்)

விடய எழுதுனர்
செல்வி.எம்.வி.எப்.பர்ஸனா
(முகாமைத்துவ உதவியாளர்)

இதழ் ஆசிரியர்
செல்வி.ஸ்கொலஸ்டிகா அமலினி நந்தகுமார்.

பேரவை உறுப்பினர்கள்
01.திரு.கு.நாகநாதன்
02.திரு.M.முத்துமாதவன்
03.கலாபூஷணம் எச்.மெத்தியேஸ்
04.திரு.எ.ஜெயரஞ்சித்
05.திரு.ஆ.ரூபதர்
06.திருமதி.கோ.இந்திரகுமார்
07.திரு.ஜே.ஏ.ஓ.ஜவாத்
08.செல்வி.ரி.பவானி
09.திரு.ஏ.வினுராஜ்
10.திருமதிதேவமனோகரி
11.திரு.அ.அழகுராஜ்
12.செல்வி.கந்தசாமி வினோதினி
13.கலாபூஷணம் தாழை செல்வநாயகம்
14.திரு.என்.நகுலராஜ்.
15.திரு.ஏ.வசந்தகுமார்.
16.திரு.யுகராஜா ஜெயராஜ்

விழா ஏற்பாட்டுக்குழு
கிராம சேவை உத்தியோகத்தர்கள்
சமூர்த்தி உத்தியோகத்தர்கள்
வெளிக்கள உத்தியோகத்தர்கள்
உள்ளக உத்தியோகத்தர்கள்
பட்டதாரி பயிலுனர்கள்
பாடசாலை அதிபர்கள்
கலைமன்ற அமைப்புக்கள்

அச்சகம்
மடோனா அச்சகம், செங்கலடி

அட்டை வடிவமைப்பு ஆலோசனை
செல்வி.ஸ்கொலஸ்டிகா அமலினி நந்தகுமார்

அட்டை பட வடிவமைப்பு
மடோனா அச்சகம், செங்கலடி

கணனி அச்சுப்பதிப்பு
திரு.யோ.ரொசாந்
திரு.அ.வினோக்காந்.

முன்னுரை

பிரதேச மலர்கள் யாவும்,பாடசாலை மாணவ மாணவிகளும் வெளிமட்டகலைஞர்களுக்கும் போட்டிகள் நடாத்தி அதில் வெற்றி பெற்ற ஆக்கங்களையும் பல்வேறு வகை கட்டுரைகளிடம் இருந்து கட்டுரைகள் பெறப்பட்டு ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்திகளுடனும், போட்டி முடிவுகளுடனும் வெளிவருவது வழமையாகும். இந் நிலையில் இருந்து மாறுபட்ட ஒரு பிரதேச இலக்கிய மலர் அப்பிரதேச அல்லது மாவட்டத்தின் ஆய்வுக்குரிய நூலாக மாற்றம் அடைய வேண்டுமென்னும் எண்ணத்தின் வெளிப்பாடே இந்நூல்.

இந் நூல் வெளியிடப் போதியளவு நிதி இல்லாதவிடத்து அதற்கான நிதிச்செலவினை வழங்கிய அனைவருக்கும் நிதியினை பெற்றுக்கொடுத்த கிராம சேவையாளர் களுக்கும், சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் விழா சிறப்பு அடைய உதவிய சகலருக்கும் எனது தனிப்பட்ட இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நன்றி"

திருமதி.தெட்சணகௌரி தினேஷ் (SLAS)

(பிரதேச செயலாளரும் காலாசாரப்பேரவைத் தலைவரும்,

பிரதேச செயலகம், வாழைச்சேனை.

ஆசிச்செய்தி

மனித வாழ்வில் மக்கள் இன்பமாக இயல்பு வாழ்கை நடாத்துவதற்கு தொழில் முயற்சிகள். கல்வி சுகாதாரம்,வதிவிடம்,உணவு, உடை போன்ற அத்தியாவசிய தேவைகள் போல் பொழுதுபோக்கும் முக்கிய இடம் வகிக்கின்றது. இப்பொழுதுபோக்கு காலங்கள் நல்ல பயனுள்ள முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். முற்காலத்து மனிதர்கள் அவ்வேளைகளில் கைகொண்ட நிகழ்வுகள் அவர்களுடைய கலை கலாசாரப் பாரம் பரியங்களை வளர்க்கும் அல்லது மெருகூட்டும்; மேம்படுத்தும் செயலாக அமைந்து காணப்பட்டுள்ளது.

நாகரீகமான ஒரு சமூகத்திற்கு ஒரு பண்பாட்டு கலைப்பாரம்பரியம், விழுமியங்கள் காணப்படும். அவை இன்றைய அவசரமான உலகில் அல்லது நவீன தொழில்நுட்பத் தேவையை நோக்கிய வாழ்கையில் பேண கையாள முடியாததாக அல்லது கஷ்டமானதாக காணப்படுகின்றது. ஒவ்வொரு சமூகத்திற்கும், இனத்திற்கும் தனித்துவமான வேறுபாடுடைய இப்பண்பாட்டு கலை, கலாசாரம் போன்றவை கல்விமான்கள், அறிவாளிகள் பெரியோர்களால் திட்டமிட்டு பேணப்படல் வேண்டும்.

அந்த வகையில் கோறளைப்பற்று கலாசாரப்பேரவை; கலாசாரமுத்தமிழ் விழாவை நடாத்துவது இப்பிரதேச கலாசாரப் பண்பாட்டுப் கோலங்களைப் பாதுகாத்து காட்சிப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைகின்றது. இந்தப்பெருங்காரியத்தை செய்யும் கோறளைப்பற்று கலாசாரப் பேரவையை பாராட்டுகின்றேன்.அத்துடன் இப் பணி தொடர்ந்தும் நடைபெற வேண்டுமெனவும் வாழ்துகின்றேன்.

திருமதி P.S.M சாள்ஸ்
அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலாளரும்,
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.

கோரளைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்


கோறளைப்பற்று பிரதேச செயலக
சுற்றுலாதலங்கள்

கலாசாரம்

கலையோடு சேர்ந்த கலாசாரமே
மீன் பாடும் தேனாடாம் மட்டுமா நகரிலே
முக்கனியின் தேன் சுவையுடன் மங்களத்தையும், இனிமையையும்
ஒன்று சேர்த்து தனக்கென்றும் தன் பெருமையுடன் தக்க வைக்கும்
தமிழின் கலாசாரத்தையும் சேர்த்து பன்பாடி நிற்கும்
எம் மண்ணின் நறுமணத்தை இங்கே மலர்விக்கும் எம் கலாசாரமே
அதன் அழகை இசை பாட கவியருவில் மலரும் கலாசாரமே

குடியோடு குடியிருந்து எம் உறவுகள் புலம்பெயர்ந்து
சென்ற போதும் மறவாத பசுமையின் நினைவோடு தின்மண்ணின்
வாசனையை அங்கும் மலரவிடும் எம் மண்ணின் மைந்தர்களின் கலாசாரமே

காலையில் வலையெடுத்து கடல், குளம் வழிசென்று துடிதுடிக்கும்
மீனைபிடித்து சுவையூர கறிசமைத்து அதனை சுட சுட பரிமாறிக்
கொண்டாடும் விருந்துக்கு ஒரு கலாசாரமே

நெற் குத்து சோறாக்கி அதன் சுவையுடன் தயிரும் சேர்த்து பழத்தோடு
பரிமாறி பசிதீர்க்கும் ஒரு கலாசாரமே
பனையோலைத்தட்டும் பெட்டியும், சாயமிட்டு பாயிழைத்து
கைமாறி தன்செலவைக்காக்கும், நம் மண்ணின் கலாசாரமே
முற்றத்தில் ஊஞ்சலாடி பெய்மறந்து குழந்தைக்கு பாடும் தாலாட்டுப்பாடலும்
ஊரார் ஒன்று கூடி குரவைகளால் நடந்தோறும் திருமணச்சடங்கும்
மரணவீட்டில் உறவுகளால் பாடும் ஒப்பாரி ஓசையும் ஒரு கலாசாரமே

மூத்தோரை மறவாது அவர்காட்டிய வழியில் தொடரும் நம்மவரின்
நாட்டுக்கூத்தும், நாடகமும், ஒன்று சேர்ந்த நடனத்தின் ஓசையுடன்
ஜொலிக்கும் ஒரு கலாசாரமே
தன்னைநோக்கி வரும் தெத்திசை மக்களையும் அன்போடு
பண்போடும் வரி அனைத்து வழி காட்டி வந்தோரை
வாழவைக்கும் வாலைபூர் கலாசாரமே

இத்தனையும் ஒன்று சேர்ந்து எம் மண்ணின் மகிமையை
காலத்தால் அழியாச்சின்னமாக கைகொடுக்கும் எம் வாலைபூரின்
கோரளைப்பற்று கலாசாரப்பேரவையே – இதன் முத்தமிழ் விழாவும்,
மலர் வெளியீடும் அதன் கலாசாரமே
இதன் பயணம் தொட்ர வாழ்க வளர்க வளம் பெற
நிலை பெற நீ வாழியவே! நிலை பெற நீ வாழியவே!

திருமதி.சாந்தினிதுமாரவேல்
கிராம சேவையாளர்
புகுக்குடியிருப்பு.

கோறளைப்பற்றெங்கள் தாய் நிலமே

கோறளைப்பற்றினிலே பற்று வைத்தோம் – தமிழ்
கோலமுடன் கலைகள் கற்று வைத்தோம்
நீரலை போலவே புகழிருக்கும்– எங்கள்
நிலமதில் எழிலுடன் நிலைத்திருக்கும்

காலையில் கதிரவன் கதிர்விரிக்கும் – ஒளி
காரிருள் தன்னையே உதிரவைக்கும்
வாழையின் கனியாய் சுவையிருக்கும் – மக்கள்
வாழ்கின்ற அழகுடன் வளமிருக்கும்

கடலலை பாடுகின்ற இசையிருக்கும் – அது
கரைதனில் மோதுகின்ற நுரைபிறக்கும்
மட்வினை விரித்தொரு மணம்பரப்பும் – நாளை
மரங்களின் மன்மதம் குடியிருக்கும்

அழகுறு அரங்கமெல்லாம் கலை மலரும் – தமிழ்
இசையோடு பரதமும்,பண் வளரும்
அறிவுறு கூடங்கள் வான் உயரும் – கல்வி
அறத்தோடு பண்பாடும் நலை நிமிரும்

கனியும் விழைந்திட நெல்குவியும் – எங்கள்
பசியுடன், பட்டினி போய் மறையும்
இள நீரைத் தாங்கோது தென்னை வளையும் – அதன்
பதநீரை குடித்த கண்கள் சொருகும்.

கோறளைப்பற்றெங்கள் தாய்நிலமே! இதை
கோபுரமாய் கும்பிடுவாய் என்மனமே

ஊரெல்லாம் அன்புதனை விதைத்திடுவாய் – எல்லா
மனிதரும் உறவென்று நினைத்திடுவாய்

திரு.ம.முத்துமாதவன்
தலைவர்
அன்னை கலைமன்றம்
கரைவாகுகேணி



கோறளைப்பற்று பிரதேச நாட்டாரியல் கூறுகளின் பிரதிபலிப்பு

ஈழநாட்டில் கிழக்கு கரையோரமாக நீண்டு கிடக்கும் கிழக்கு மாகாணத்தின் வடபகுதியில் அமைத்துள்ளதே கோறளைப்பற்றாகும். பற்று என்பது நாகரீகமடைந்த மக்கள் ஊரமைத்து வாழும் பகுதிக்கு வழக்கில் உள்ள பெயர் ஆகும் இதன்படி கோரைப்புற்கள் அதிகம் கொண்ட ஓர் பரந்த நிர்வாக நிலப்பிரிவினை கொண்ட பரப்பில் நாகரீகமான மக்கள் ஊரமைத்து வாழ்ந்தமையினை சுட்டி காட்டுகிறது. எனவே தான் இப்பிரதேசம் கோறளைப்பற்று என்று அழைக்கப்படுகிறது.

கோறளைப்பற்று பிரதேசமானது ஆரம்பத்திலே வடக்காகிய வாகரை, மத்தியாக ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களை கொண்டு இயங்கி வந்தது. ஆனால் தற்போது ஓட்டமாவடி இருபிரதேச செயலக பிரிவுகளாகவும்; கோறளைப்பற்று பிரிவானது தெற்கே கிரானை தலைமையாகக்கொண்டு இயங்குவதனால் தற்போதைய கோறளைப்பற்று என்பது கும்புறுமூலை தொடக்கம் சிவந்தீவு வரை எமது பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு இயங்கிவருகிறது. கோறளைப்பற்று என்பதன் தொன்மைக்கு இலங்கை தொல்பொருள் ஆணையாளரான டாக்டர். பரணவிதான அவர்களால் வெளியீடப்பட்ட "inscription of Ceylon" எனும் வெளியீடு சான்றாகும். இதில் இவர் மட்டக்களப்பை பற்றி குறிப்பிடும் போது எல்லைகளாக காணப்பட்ட ஐந்து பற்றுக்களில் கோறளைப்பற்றும் ஒன்றாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பிரதேசம் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய வளங்களைக் கொண்டது.

ஒரு நாட்டு மக்களின் நாகரீகம், பண்பாடு, வரலாறு, பழக்கவழக்கம் போன்ற நாட்டு நடப்புக்களை உண்மையான முறையில் படம் பிடித்து காட்டுவது நாட்டுப்புற மக்களின் மரபு வழியான படைப்புக்கள் இவை சமூதாய வளர்ச்சியைக் காட்டும் காலக்கண்ணாடிகள் எனலாம். எமது மக்களின் கலை, கலாசாரம், சமயம், சமூகம், மொழி, தொழில், உணவுப் பழக்கவழக்கம்,இடப் பெயர்வு, இலக்கியம் மக்கட் பெயராய்வு, திருமணமுறைகள், கிராமிய பண்பாட்டு விளையாட்டு, கல்வி , சடங்குமுறைகள், மருத்துவம்,தொழிநுட்பம் போன்ற நாட்டாரியல் கூறுகளில் உற்று நோக்குமிடத்து இம் மக்களின் உன்னத போக்கினை அறியலாம்.

கோறளைப்பற்று பிரதேசத்தில் பல்லின மக்களும் செறிவாக பரந்து வாழ்வதை நோக்கலாம். மக்கள் தமது நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், சடங்குகள் என்பவற்றை தமது சமயத்தின் அடிப்படையில் பின்பற்றுவதனை நோக்கக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் "தெய்வம் ஒன்றே அதனை பல வடிவங்களில் வணங்கலாம்." எனும் கொள்கைக்கு அமைவாக வழிபாடு மேற்கொள்கின்றனர். மக்கள் வாழ்க்கையின் இலட்சியம் இறைவனை அடைதல் அல்லது இறைமையை பூரணமாக உணர்தல் ஆகும். ஆனால் சாதாரண மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இறைவனை வணங்குகிறார்கள். தங்களினதும் கிராமத்தினதும் பாதுகாப்பு கருதியும் மழைவேண்டியும் நோய் நீங்குவதாகவும், தொற்று நோய்களை கட்டுப்படுத்த வேண்டியும் கடவுளை அதற்கேற்ற வடிவங்களில் வணங்கி வருகிறார்கள். எமது பிரதேசத்தில் ஆகம முறைப்படி வழிபாடுகள் இடம்பெற்றாலும் ஆகம முறைக்கு புறம்பான வழிபாடுகளும் நிலவுகின்றன. இங்கு நாகவழிபாடு, மரவழிபாடு, வைரவர் வழிபாடு என்பனவும் காணப்படுகின்றன. சில கிராமிய வழிபாட்டு முறைகளிலே சடங்குகள், பலியிடல் நேர்த்திகள் செய்வது போன்றவை இடம்பெறுகிறது.

ஆலயங்களில் தெய்வமேறியவர்கள் ஆடுவது முக்கிய நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. தெய்வங்களில் ஒன்றை "வாலாயம்" செய்பவர்களுடைய உடலில் அத்தெய்வம் உறைகின்றதாகவும்; மந்திர உச்சாடனங்கள் அத்தெய்வங்களை உசுப்பிவிடுவது மூலமும் அவற்றை ஆடச்செய்யலாம்; என்றும்; அத்தகையவர்கள் கூறும் "கட்டு" (அருள் வாக்கு) பலித்து விடும் என்றும் பலர் திடமாக நம்புகிறார்கள். இத்தகைய நம்பிக்கை நீண்ட காலமாக வழக்கத்தில் உள்ளது. இவ் வழிபாடுகளை பேச்சியம்மன், மாரியம்மன், நாகதம்பிரான், நரசிங்கவைரவர் போன்ற கோயில்களில் காணலாம். ஏனைய மதப்பிரிவினர்களாக இஸ்லாம், கிறிஸ்தவம் என்பன காணப்படுகிறது. அண்மைக் காலமாக பிரச்சாரங்கள் காரணமாக பாரியளவில் மதமாற்றங்கள் இடம்பெற்று வருவதையும் குறிப்பிடலாம் (குறிப்பாக இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறுதல்) அவதானிக்க கூடியதாக உள்ளது.

இப்பிரதேச கல்வியறிவினை நோக்கும் போது இம்மக்கள் பாடசாலைக்கல்வி, தொழிற்கல்வி என்பனவற்றை வளர்த்துக் காக்க சாதியமைப்பினை துணை கொண்டிருந்தனர். கட்டிடம், சிற்பம், சித்திரம், ஆடல், இசை முதலிய கலைகள் மட்டுமன்றி பாத்திரம் வனைதல் கொல்லர் வேலை, தச்சுவேலை, மரவேலை, நகை இழைத்தல், நெசவு போன்ற தொழில்களும் சாதியடிப்படையில் காத்து வளர்க்கப்பட்டன. இது குலவித்தை எனப்பட்டது. எமது பிரதேசத்திலே பாரிய உற்பத்தி நிறுவனமான ஆடைத்தொழிற்சாலை இயங்கிவருகிறது. மற்றும் அலுமாரிக் கம்பனியும், நிக்கல் கம்பனியும் முன்னர் இயங்கியதாக கூறப்படுகிறது.எம்மக்களிடையே காணப்பட்ட இலக்கியங்களாக சிறுகதை, கவிதை, கட்டுரை, கூத்து, நாடகம் போன்றவற்றை குறிப்பிடலாம். சிறுகதை எழுத்தாளர்களாக க.செல்வநாயகம் ஹெட்டி ஆராய்ச்சி மெத்தியேஸ், திரு.மு.தவராசா, முத்துமாதவன், சபா சிறிதரன் போன்றோரையும்; கவிதையடிப்படையில் சிறிதர், கல்யாணி, முத்துமாதவன் போன்றோரையும் குறிப்பிடலாம். கட்டுரையாக்கத்தை பொறுத்தமட்டில் முத்துமாதவன்

மெத்தியேஸ் திரு.க.செல்வநாயகம் போன்றோரையும் குறிப்பிடலாம். இங்கு நாட்டுக் கூத்துக்களாக சயந்தன் கூத்து, இராமர் கூத்து, கிசகன் சங்காரம், மதுரவாசகம், போன்றன ஆடப்படுகின்றது. முற்றும் நூல் வெளியீடுகளாக செவ்வாழை, புத்தொழி கலாசார மலரான இளம் பரிதி போன்றனவும் குறிப்பிடலாம். மற்றும் தற்போது இலக்கிய எழுத்தாளர்களுக்கு களம் அமைக்கும் வண்ணம் இலக்கியா இதழும் வெளிவருகிறது. இலக்கியம் தாவர வைத்தியம் (மனித வைத்தியம், மிருக வைத்தியம், விஷ வைத்தியம்) சோதிடம், மாந்திரிகம் கப்பல் கட்டும் கலை கூத்துக்கலை நகைத்தொழில், பற்றிய பல செய்திகள் மட்டக்களப்பு நாட்டார் நூல்களில் காணப்படுகின்றன. வைத்தியம் சம்பந்தமான வாகடங்கள் ஏட்டு நூல்களாக இன்றும் உள்ளன. முனிமந்திர ஔஷதங்கள் மூலம் விஷத்தை இறக்கி சுகம் பெறச் செய்யும் பல வைத்தியர்களும் வைத்திய நூல்களும் இன்னும் உள்ளன. சுதேச மிருக வைத்தியர்களும் உள்ளனர். நாட்டுப்புற மருத்துவர்கள் மருத்துவ முறைகளை இன்னும் இரகசியமாகப் பேணி பாதுகாக்கின்றனர்.

கலைகளை நோக்கும் போது ஓவியக்கலையை பாடசாலைகள், ஆலயங்கள் பொதுவிடங்களில் காணலாம். சமயச்சார்பு கலைகளில் காவடியாடல், தீ மிதித்தல் போன்றவற்றினை இப்பிரதேசத்தில் காணலாம். அத்தோடு கை வினைப் பொருள் உற்பத்தியும் இப்பிரதேச மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. அத்தோடு நடனக் கலையை நோக்கும் போது பாடசாலையில் ஒரு பாடமாக இக்கலை வளர்க்கப்படுவதுடன் பொதுவான கலையரங்கு நிகழ்வுகளிலும் நடனக்கலை பிரபல்யம் பெறுகின்றது. இசைகளை நோக்கும் போது பெரிதான வளர்ச்சி காணப்படாவிடினும் அண்மையில் இப்பிரதேசத்தில் தோற்றம் பெற்ற "சுப்பர் சக்தி" இசைக்குழு இசைக்கலையை வளர்ப்பதிலும் விழிப்புணர்வு பெற்று இயங்கி வருவதனையும் காணலாம்.

இப்பிரதேசத்தில் கதைப்பாடலர்கள், பழமொழிகள், விடுகதைகள், தாலாட்டுப்பாடல்கள் என்பன சில சில இடங்களில் பின்பற்றப்படுவதைக் காணலாம். மரணவீடுகளில் இறந்தவர்களின் எட்டாம் நாள் சடங்கு முடியும் வரை வரலாற்று கதைப்பாடல் பாடப்படுவதை நோக்கலாம்.

நெல் மக்களின் தேவைக்கு விளைவிக்கப்பட்டது. இதனால் சோறு கறியே பிரதான உணவாக வகைப்படுத்தப்பட்டது. அத்தோடு ஆறு, கடல்களில் வாழும், மீன், நண்டு, இறால், கல்வாட்டி, கூனி முதலிய நீர்வாழ்ப்பிராணிகளும் காடுகளிலிருந்து கிடைக்கும் மான், மரை பன்றி போன்றவற்றின் இறைச்சியும் சேனைகளின் வீட்டுத்தோட்டங்களிலும் பயிரிடப்படும் மரக்கறி வகைகள், மா, பலா, வாழை தோட்டை, எலுமிச்சை, முதலிய கனிவகைகளும், பட்டிப்பட்டியாக வளர்க்கப்படும் மாடு, எருமை என்பன மூலம், பெறப்படும் பால்,தயிர், நெய், இறைச்சி என்பனவற்றை உணவாக பயன்படுத்துவதுடன் தென்னங்கள்ளையும் அக்கள்ளிலிருந்து வடிக்கப்படும் அரக்கு என அவர்களால் அழைக்கப்பட்ட சாராயத்தையும் அவர்கள் பருகி களித்தனர். மேலும் இவர்களது உணவு பழக்கவழக்கங்களில் நாகரீக பண்பாட்டில் உணவு பழக்கவழக்கங்களையும் பேணுவோரும் உள்ளனர். எனினும் ஒரு சில கிராமியபண்பாட்டை பின்பற்றும் மக்களும் உள்ளனர். இவ்வாறான மக்கள் காலையில் தண்ணிச்சோறு என்று குறிப்பிடப்படும் உணவும் சோற்றைக்கரைத்துக் குடிக்கும் வழக்கமும் உண்டு. சேமிப்பின் அடிப்படையில் அரிசியினை கைபிடி அளவு எடுத்து சேமிப்பவர்களும் உள்ளனர்.

இப்பிரதேச மக்களின் விளையாட்டுக்களை எடுத்து நோக்குவோமாயின் சிறார்கள் தொடக்கம் பெரியோர் வரை பல விளையாட்டுக்களில் ஈடு படுகின்றனர். குறிப்பிடத்தக்கதாக ஒளித்துப்பிடித்தல் (கண்ணாம்பூச்சி) ஆலாப்பறத்தல் புங்கம் புளியடி, கிள்ளுப்பிராண்டி, கிட்டிப்புள்ளு, கபடி, குண்.டு விளையாட்டு, பிள்ளையார் கட்டை(கட்டைப்பந்து) கிளித்தட்டு, நாயும் இறைச்சித்துண்டும், குளங்கரை, வார். போன்ற விளையாட்டுக்களை அன்று தொடக்கம் இன்று வரை இப்பிரதேசத்தில் பின்பறறி வருவதுடன் பாலர் பாடசாலையில் இன்னும் பயிற்றுவிக்கப்படுவதை காணலாம்

அத்தோடு மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் பாடசாலைகளுக்கிடையில் கழகங்களுக்கிடையில் களியாட்ட நிகழ்வுகளின் போதும் நடைபெறுவதனை அவதானிக்கலாம். அவ்வகை விளையாட்டுக்களாக ஓட்டம், வலைப்பந்து, கரப்பந்து, ஈட்டி, குண்டு, கிறிக்கட், மரதன் போன்றவற்றினை குறிப்பிடலாம்.

இப்பிரதேச ஊரார்ப்பார்வையையும் மக்கட் பெயரார்வத்தையும் நோக்கும் போது ஊர்களை ஒரு ஊரிலிருந்து இன்னுமொரு ஊருக்கு வேறு படுத்தி காட்ட இப்பெயர்களை இட்டனர். என கூறலாம், சில பெயர்கள் காரணப் பெயர்களாகவும் வழங்கப்படுவதனைக் காணலாம். ஊதாரணமாக கோறளைப்பற்றினுள் அடங்கும் வாழைச்சேனை, பேய்த்தாழை, சுங்கான்கேணி, கறுவாக்கேணி , புதுக்குடியிருப்பு பாசிக்குடா. கற்குடா, நாசிவன் தீவு கண்ணகி புரம், கல்மடு முறாவோடை கிண்ணியடி, கும்புறு முலை வெம்பு, போன்றன காரணப் பெயர்களாகும். எடுத்துக்காட்டாக சேனையில் வாழைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டதால் "வாழைச்சேனை" என்ற பெயரும் தாழை மரங்களில் பேய்கள் குடி கொண்டுள்ளதால் நம்பப்பட்டதால் பேய்தாழை எனவும் ஊர்ப் பெயர்கள் பழைமை எச்சங்களாக இன்னும் மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கி நிற்கின்றன.மக்கட் பெயரார்வத்தை நோக்கின் மனித குலத்தில் பெயர் என்பது முக்கிய இடத்தை பெறுகின்றது. மனிதர்களை மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்ட பெயர் ஒரு பிரதான குறியிடாக கருதப்படுகிறது. இப்பிரதேசத்தில் பல்லின மக்களும் தங்களை வேறுபடுத்திக் காட்ட தமது சமய, மொழி, மத பண்பாட்டிற்கேற்ப பெயர்களை இடுகின்றனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களை தொகுத்து நோக்கும் போது கோறளைப்பற்று பிரதேச நாட்டாரியல் கூறுகளில் பிரதி பலிப்புக்கள் சிலவற்றினை கொண்டு இப்பிரதேச வளர்ச்சியில் அது எவ்வளவு தூரம் செல்வாக்கு செலத்துகின்றது. எனவும் அவற்றின் வளர்ச்சிப்போக்கையும் அறியக்கூடியதாக உள்ளது.

திரு.E.சீதாராமன்
முகாமைத்துவ உதவியாளர்,
கோறளைப்பற்று பிரதேச செயலகம்.
வாழைச்சேனை.

நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்

ஒரு நாட்டு மக்களின் நாகரீகம் பண்பாடு பழக்கவழக்கம் வரலாறு போன்ற நாட்டு நடப்புக்ககளை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புக்கள் ஆகும். இவை சமுதாய வளர்ச்சியை காட்டும் கண்ணாடி எனலாம்.

இந் நாட்டுப்புற படைப்புக்களை கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் நோக்க முடியும்.

1. நாட்டுப்புறப் பாடல்
2. நாட்டுப்புறப் கதைகள்
3. நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்
4. நாட்டுப்புறக் கலைகளும் கைவினைப் பொருட்களும்
5. நாட்டுப்புறத் தெய்வங்கள்
6. நாட்டுப்புறவிளையாட்டுக்கள்
7. நாட்டுப்புற மருத்துவம்
8. நாட்டுப்புற நம்பிக்கைகள், பழக்கவழக்கம், சடங்கு
9. நாட்டுப்புற கட்டடக்கலை
10. நாட்டுப்புற தொழில் நுட்பம்
11. நாட்டுப்புற இசை
12. நாட்டுப்புற நடனம்
13. பழமொழிகள்
14. விடுகதைகள்
15. புராணங்கள்
16. மக்கள் பெயரார்வு
17. ஊர்ப் பெயராய்வு
18. மொழி வழக்குகள்
19. பழங்குடி நாட்டுப்புறவியல்.

நாட்டுப்புறப் பாடல்

நாட்டுப்புற பாடல்களின் தோற்றமானது பழங்காலத்தில் பைந்தமிழ் இசை வளர்த்த பாணர்கள் ஏர்க்களம் பாடுதல், போர்க்களம் பாடுதல் முதலான வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஏர்க்களம் பாடியும் போர்க்களம் பாடியும் வருணித்த பாடல்கள் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெங்களிலெல்லாம் வெகுவாகப் பரவி அவையே மக்களிடம் வழிவழியாகப் பரப்பப்பட்டுக்காலம் செல்லச் செல்ல ஆதி வடிவம் சிதைந்து அது நாடோடிப் பாடல்களாக மாறியிருக்க வேண்டும் என்று பேராசிரியர் அ.மு.ப அவர்களின் கருத்து சிந்திக்கத்தக்கது.

நாட்டுப்புற பாடல்களை சூழல் அடிப்படையில் எட்டுவகையாகப் பிரிக்கலாம். அவை

1. தாலாட்டுப்பாடல்கள்
2. குழந்தைப்பாடல்கள்
3. காதல் பாடல்கள்
4. தொழிற்பாடல்கள்
5. கொண்டாட்டப்பாடல்கள்
6. பக்திப்பாடல்கள்
7. ஒப்பாரிப்பாடல்கள்
8. பன் மலர்ப்பாடல்கள் என்பன குறிப்பிடத்தக்கன.

நாட்டுப்புற கதைகள்

வாய்மொழி இலக்கிய மொழிவகைகளுள் அடங்கும் கதைகள் யாவும் நாட்டார் கதைகளின் பால் உள்ளடக்கப்படும். இதன்படி ஈழத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை மக்களிடையே தமிழ் மன்னர்கள் பற்றி வழக்கியல் சார்ந்த கட்டுக்கதைகளாக சங்கிலியன், பண்டார வன்னியன், மாருதபுரவீக வல்லி போன்ற அரச பரம்பரையினர் தொடர்பான கதைகளும் பூதத்தம்பி, வேலப்பணிக்கன், அரியாத்தை போன்றவர்களுடைய கதைகளும் குறிப்பிடத்தக்கன

நாட்டுப்புறகதைப்பாடல்கள்

ஓரிடத்தில் அல்லது ஒரு மாவட்டத்தில் வழங்கப் பெறும் ஒரு புகழ்மிக்க கதைப்பாட்டாக பாடப்படுவது கதைப்பாடல் எனப் பெயர் பெறும். கதைப்பாடல்களின் பண்பு எனும் போது கதைப்பாடலாக எடுத்துரைக்கப்படுவதுடன் உள்ளடக்கத்தாலும் நடையாலும் பெயராலும் கதைப்பாடல் மக்களுக்குரிய தனிச்சம்பவம் ஒன்றை பிரதி பலிப்பதுடன் தற்சார்பு அற்று கதையில் நிகழ்ச்சிப் போக்கு உரை நடையாலும் சம்பவங்களாலும் முடிவை நோக்கி விரைவாகச் செல்லும்.

தமிழில் நூற்றுக்கணக்கான கதைப்பாடல்கள் இருப்பதால் அவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து தமிழில் உள்ள கதைப்பாடல்களை திரு.சு. சண்முக சுந்தரம் மூவகைப்படுத்துகின்றார். அவை வருமாறு

1. புராண கதைப்பாடல்கள்
2. சமூகக் கதைப்பாடல்கள்
3. வரலாற்றுக்கதைப்பாடல்கள்.

ஈழத்தில் புராணக்கதைப்பாடலில் கண்ணகி வழக்குரையும் சமூகக் கதைப்பாடலில் பூதத்தம்பி வேலப்பணிக்கன், அரியாத்தை கதைப்பாடல்களும் வரலாற்றுக்கதைப்பாடலில் சங்கிலியன் பண்டார வன்னியன் மாருதப்புரவீக வல்லிக் கதைப்பாடல்களும் குறிப்பிடத்தக்கன.

நாட்டுப்புற கலைகளும் கைவினைப் பொருட்களும்.

நாட்டுப்புற கலைகளின் தோற்றத்தினை எடுத்து நோக்கும் போது பூதங்களினின்றும் கெட்ட ஆவிகளினின்றும் தம்மைக் காப்பாற்றுமாறு தெய்வங்களை வேண்டும் போது கலைகள் தோன்றின.

இதன்படி தொன்மைக்கலைகள் பழங்குடிகளிடமும் நாட்டுப்புறக்கலைகள் நாட்டுப்புற மக்களிடமும் திருந்திய கலைகள் முன்னேறிய மக்களிடமும் காணப்படுகின்றன. இவை இன்பம் புனிதம் போராற்றலை வெளிப்படுத்தி நிற்பதுடன் கலைகளை சமூகச் சார்புக் கலைகள் சமயச் சார்புக்கலைகள் என இரு வகைப்படுத்தி நோக்க முடியும்.

சமூகச் சார்புக் கலைகளில் வீரக்கலைகளாகிய சிலம்பாட்டம் ஜல்லிக்கட்டு முதலியன காணப்பட சமயச்சார்புக்கலைகளில் காவடி தீமிதித்தல் கரகம், கும்மி, ஒயிலாட்டம் கோல் பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், தேவராட்டம், சக்கையாட்டம், கணியன் ஆட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

நாட்டுப்புறக்கலையுடன் தொடர்புடைய கைவினைப் பொருட்களை உற்பத்தியில் பண்பாட்டுக்கலை வளர்ச்சி பெற்றுள்ளது. இதனை ஸ்டீபன் தென்னிந்திய கிராமியக்கலை எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப்புறதெய்வங்கள்

இயற்கையின் ஆற்றலைக்கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமலிருக்க அதனை வழிபட ஆரம்பித்தான். இதனால் இயற்கை வழிபாடு ஆவியுலக வழிபாடு குலக்குறி வழிபாடு புனிதப் பொருள் வழிபாடு, முன்னோர் வழிபாடு, என மாற்றம் பெற்று சிறு தெய்வ வழிபாடு நாட்டுப்புற தெய்வ நம்பிக்கையில் தோற்றம் பெறலாயிற்று.

நாட்டுப்புற தெய்வ நம்பிக்கையும் மக்கள் தொடர்பும் எனும் போது நோய் நீங்கவும் பிள்ளை வரம் கிடைக்கவும் மழை பெய்யவும் எடுத்த காரியம் சுலபமாக முடியவும் ஊருக்கு நல்லது நடக்கவும் மக்கள் நாட்டுப்புற தெய்வங்களை வழிபட்டனர். வழிபாடுகளில் காணிக்கையழித்தல் மொட்டையடித்தல் தீமிதித்தல், தீச்சட்டி எடுத்தல் போன்றவை குறிப்பிடத்தக்கன.

நாட்டுப்புற விளையாட்டுக்கள்

மனித இன வரலாற்றில் மனிதன் பல பயிற்சிகளை மேற்கொண்டான். சமுதாய மாற்றத்தின் விளைவாக அப்பயிற்சிகள் காலப் போக்கில் விளையாட்டுக்களாக பரிணமித்தன. இதன் படி நாட்டுப் புறக்கலைகளாகக் காணப்படும் வீரக்கலைகளாகிய சிலம்பாட்டம், ஜல்லிக்கட்டு என்பன கலைகளாகவும் விளையாட்டுகளாகவும் காணப்படுவதுடன் பிச்சை அவர்கள் எழுதிய தமிழர் பண்பாட்டில் விளையாட்டுக்கள் எனும் நூலில் பல்லாங்குழி விளையாட்டை நாட்டுப்புற விளையாட்டுக்களில் ஒன்றாக கூறுவதுடன் ஆபிரிக்காவில் விளையாடும் பல்லாங்குழியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளமை குறிபபிடத்தக்க ஒன்றாகும்.

நாட்டுப்புற மருத்துவம்

நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பா. இதனை நாட்டு வைத்தியம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம், என்றெல்லாம் கூறுவர். நாட்டுப்புற மருத்துவர்கள் மருத்துவ முறைகளை இன்னும் இரகசியமாக பேணி பாதுகாக்கின்றனர்.

நாட்டுப்புற நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள்

புராதன இனக் குழு சமூக மக்கள் தங்களுக்கு நன்மை பயப்பதும் தீமை பயப்பதுமாகிய இயற்கை ஆற்றலைக்கண்டு அவை உயிருள்ளவையாக கருதி அஞ்சினார்கள் இந் நிலையில் இயற்கை ஆற்றல்களால் பாதிக்கப்பட்ட அவர்கள் அவற்றை கட்டுப்படுத்த எண்ணினர்.

இவ் நிலையில் இயற்கை ஆற்றல்களின் விதிகளை அறிவியல் பூர்வமாக அறிந்து கொள்ள இயலாத நிலையில் அவர்கள் இருந்ததால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வேறு வழிமுறைகளைக் கையாண்டனர். இவ்வழிமுறையை போலச்செய்தல் அல்லது பாவனை மெய்ப்பாடு என அழைக்க முடியும்.

இதன் படி மழை இல்லாத காலங்களில் மழை பெய்யும் போது உருவாகின்ற இயற்கை நிகழ்வுகளான இடி மின்னல், ஆகியவற்றைப் போல பாவனை செய்தால் மழை பெய்யும் என நம்பினர். இருதய நாத் எனும் மானிடவியலாளர் கடம்ப இனக்குழுவின் நடனம் பற்றி கூறுகையில் மழை வேண்டி இக்குழு நடனம் ஆடும் போது பெண்கள் கை வளையல்களை முறத்தில் போட்டு ஓசை யெழுப்புதல் - இடியைப் போன்று பாவனை செய்தல் முந்தானை விரித்துக் கொண்டு ஆடுதல்- மின்னலைப் போன்று பாவனை செய்வதாகவும் காணப்படுவதாக கூறுகின்றார்.

இவ்வாறான நம்பிக்கைகள் பழக்க வழக்கம் ஊடாக சடங்குகளின் தோற்ற வளர்ச்சியினை நோக்கும் போது உடலுறுப்புக்களில் தோன்றும் பருக்கள் பாலுண்ணிகள் ஆகிய குறைகளை நீக்க கோயில் குளத்தில் சர்க்கரை அல்லது உப்பு அல்லது மிளகாய் போடுதல் எறும்புப் புற்றில் சர்க்கரை போடல் கிறிஸ்தவர்கள் நீரில் உப்பு அல்லது சர்க்கரை அல்லது மிளகு இடுதல் மெழுகுதிரி ஏற்றல் போன்ற செயற்பாடுகள் ஊடாகக் கடலில் இடப்பட்ட பொருட்கள் மக்கி மறைவது போன்றும் எறும்புப்புற்றில் எறும்புகள் மூலம் தின்னப்பட்டு அவை கொஞ்சம் கொஞ்சமாக குறைவது போன்றும் மெழுகுவர்த்தி எரிந்து கரைவது போன்றும் பரு, பாலுண்ணி உடலுறுப்புக்களிலிருந்து நீங்கும் என்பது இச்சடங்குகளின் உட்பொருளாகும்.

நாட்டுப்புற கட்டடக்கலை

கட்டடக்கலையில் தோற்றம் வளர்ச்சி பற்றி முனைவர் மா. இராசமாணிக்கனார் கூறும் போது ஆதி காலத்தில் பாறையிடுக்குகளிலும் மரப்பொந்துகளிலும் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் பின் மண், மரம் இலை போன்ற தழையாலும் வீடு கட்டிக் கொள்ளத் தொடங்கினான். பச்சைமண், செங்கல், மரம், கருங்கல் ஆகியவற்றைச் சுவராகவும் மேற்கூரையாக கீற்று, பனை ஓலை, தட்டை, ஓடு முதலியவையும் பயன்படுத்திக் கொள்ளும் வளர்ச்சி நிலை பின் வந்தது.

கட்டடக் கலை மரபில் கூடம் என்பது பலர் கூடக்கூடிய பெரிய பகுதி முன்றில் என்பது முன் பகுதியையும் மாடம் என்பது ஒரே அளவில் மேலே எழுப்பப்படுவதும் கோபுரம் என்பது குவிவாக மேற் செல்லச் செல்ல அளவு குறைந்து அமைக்கப்படுவது. கூரை வேய்ந்த பின் மேல் நடு இடத்தில் ஏற்படும் இடை வெளியில் மழை நீர் ஒழுகுவதை தடுக்க பானையைக் கவிழ்த்து வைத்தனர். இதுவே பின்னர் கலசம் அமைக்கும் முறையாக வளர்ந்தது என்பர். முனைவர். மா.இராசமாணிக்கமானார் கருத்து இவ்வாறு காணப்படினும் நாட்டுப்புறக் கட்டக்கலை, மரபு வழிக்கட்டடக்கலை என்பதன் அடிப்படையில் இது பற்றிய ஆய்வுகள் முற்றுமுழுதாக ஆரம்பிக்கப்படவில்லை எனலாம்.

நாட்டுப்புற தொழில் நுட்பம்.

மனிதன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள சில பொருட்களை உருவாக்கினான் அவற்றைக்காலப் போக்கில் அழகுடனும் தொழில் நுட்பம் வாய்ந்ததாகவும் அமைத்தான். நாட்டுப்புற தொழில் நுட்பமே இன்று பல இயந்திர வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ளது. உதாரணமாக ஏர்க்கலப்பை இன்று இயந்திரக் கலைப்பைக்கு முன்னோடி. அதே போன்று இன்றும் நாட்டுப்புற தொழில் நுட்பம் பேணப்படுகின்றது. நெல் சேமிப்பு பட்டறை இறைச்சி, மீன் உலரவைத்து பாதுகாத்தல், பழச்சாறு செய்தல் உணவுகளை உலர வைத்தல் போன்றன குறிப்பிடத்தக்கன.

நாட்டுப்புற இசை

மிடற்றிசையோடு இசைக்கருவியிசைகளாகிய தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, போன்றவற்றில் குழலிசை,யாழிசை தமிழர் பழங்குடிகளினால் அதிகம் போற்றப்பட்டன

நாட்டுப்புற நடனம்

அழகுற ஆடுவது நடனம் எனவும் குதித்தாடுவது கூத்து எனவும் அழைக்கப்படுவதுடன் நாட்டுப்புற நடனத்தில் இவை இரண்டும் உள்ளடக்கப்பட்டு காணப்படுவது சிறப்பு மிக்கது.

பழமொழி

பழமொழி என்பது சான்றோர்களின் பட்டறிவு மொழிகளாகும். இது சேந்தன், திவாரகம், முதுரை முதுமை, மொழிமை, முன் சொல், முது சொல், பழச் சொல் எனும் ஆறு பொருளைத்தரும்.

பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியை அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன. அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஆற்றல் வாய்ந்தன. அவை மக்கள் மனதிலே ஆழமாகப் பதிந்து நற்செயல்களை தூண்டச் செய்வன.

அத்துடன் தொன்று தொட்டு வழங்கி வரும் அனுபவங்களை சுருக்கமாக வாக்கியமாக கூறி அது பற்றிய தீர்ப்பையும் வழங்கி வருவதுடன் பட்டறிவு ஒருவருடையதாகவும் பலருடையதாகவும் காணப்படும்.

அத்துடன் பழைய பழமொழிகள் புதிய சந்தர்ப்பத்திற்கும் அனுபவத்திற்குமேற்ப மாற்றியமைக்கப்படுவதுண்டு. உதாரணமாக ஈழத்தில் தனக்குத் தெரியாதசிங்காரம் பிடரிக்குச் சேதம் என்று வழங்கும் பழமொழி தனக்குத் தெரியாச்சிங்களம் பிடரிக்குச் சேதம் என மாற்றம் பெற்றுள்ளது. பல மொழிகள் போதனை அல்லது நீதி நெறிக்கதைகளின் சுருக்கமாக அமைவன . உதாரணமாக இராமனைப் போல் இராசா இருந்தால் அனுமானைப் போலச் சேவகனும் எனும் பழமொழி குறிப்பிடத்தக்கது.

விடுகதைகள்

விடுவிக்கப்பட வேண்டிய புதிர்கள் விடுகதைகள் ஆகும். இது மயக்கு மொழித் தொடர்களைப் பிரித்து பொருள் காண்பதனை பிரதான நோக்காக கொண்டது. இதன் முக்கிய குறிக்கோள் சிந்தனையை தூண்டி அறிவு ஊட்டுவது ஆகும். விடுகதைகளை நாட்டுப்புற விடுகதைகள் இலக்கிய விடுகதைகள் என இரு வகைப்படுத்தமுடியும்.

புதிர் போடுவதும் அதற்கு பதில் அளிக்கும் தன்மை இன்று நவின உலகில் க்விஸ் நிகழ்வுக்கு முன்னோடி என்பதும் குறிப்பிடத்தக்கது.

புராணங்கள்

நாட்டுப்புற இலக்கிய வரலாற்றில் புராணங்கள் பற்றி விரிந்தளவில் ஆய்வு செய்யப்படவில்லை எனினும் புராணக்கதைப்பாடல்கள் இராமாயணம் பாரதம் போன்றவற்றை உள்ளடக்கி காணப்படுகிறது. இதன் அடிப்படையில் புராணங்கள் சூரிய சந்ந்திர அக்கினிப்புராணங்களை அடிப்படையாக கொண்டு ஆய்வு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

மக்கட் பெயராய்வு

மனித இன வரலாற்றில் பெயர் முக்கியமான இடத்தை பெறுகிறது. ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்திக்காட்டுவது பெயராகும் பெயரைக் குறியீடாக மட்டும் கருதுவதில்லை. அவை மனிதனின் ஆளுமையையும் இயல்பையும் காட்டுவனமாக மட்டுமன்றி சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கை பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. பெயர்கள் பழைமை எச்சங்களைாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் பிரதி பலித்து நிற்கின்றன எனலாம். இதன் படி இன்று கூட மக்கட் பெயர்கள் தமது பண்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் உள்ளன. இதன் படி பெயர்கள் இறைவன், வீரர்கள் போன்றோர்களை புலப்படுத்தி நிற்கின்றன.

ஊர்ப் பெயராய்வு

மனித இன வரலாற்றை நோக்கின் நாடோடி வாழ்க்கையிலிருந்து ஓரிடத்தில் நிலையாக வாழத்தலைப்பட்ட காலத்தே ஊர்ப் பெயர்கள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஒரு ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்திக் காட்ட இப் பெயர்களை அமைத்துக் கொண்டனர். இடப் பெயர்கள் இட வரலாற்றின் காலப் பெட்டகம் எனலாம். ஊர்ப்பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்றன.

மொழி வழக்குகள்

நாட்டுப்புற மக்களின் சொற்கள் மண் வளச் சொற்கள் என அழைக்கப்படுகின்றன. இவ் மண் வளச் சொற்கள் இடத்திற்கு இடம் இனத்திற்கு இனம் தொழிலுக்கு தொழில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவ்வாறான மொழிவழக்கு சொற்களின் சேகரிப்பானது. பல்கலைக்கலகம், பண்பாட்டலுவல்கள் அமைச்சு போன்றன சேகரிப்பு பணியில் வடகிழக்கு மாகாணத்தில் ஈடுபட்டுள்ளமையை காணலாம்.

பழங்குடி நாட்டுப்புறவியல்.

பழங்குடிகளின் வாழ்க்கை மரபு பற்றி ஆய்வு செய்வது பழங்குடி நாாட்டுப்புறவியுயல் எனப்படும். இதன்படி இலங்கையின் பழங்குடி வரலாறுகளில் மட்டக்களப்பு பழங்குடி குகன் குல முற்குகர் வரலாறு மரபுகள் என ஞா.சிவசண்முகம் அவர்களின் நூலின் ஏனைய நூல்களாக அருள் நாயகத்தின் மட்டக்களப்பு சீர்பாத வரலாறு வித்துவான் வி.சி.கந்தையாவின் மட்டக்களப்பு தமிழகம் போன்றவையும் ஏனைய வரலாற்று நூல்களாக செல்வி க. தங்கேஸ்வரியின் கலிங்க மாகோன் வரலாறு, குளக்கோட்டன் தரிசனம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவை தவிர அதிக நூல்களும் கட்டுரைகளும் காலத்திற்கு காலம் வெளிவருவது குறிப்பிட்த்தக்கது.

மேற்கூறப்பட்ட நாட்டார் கூறுகளை ஒவ்வொரு பிரதேசமும் தமது தேசத்தில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என ஆய்வு செய்யின் தமது பிரதேச வரலாறு இருப்பு போன்றவற்றினை உறுதி செய்ய முடியும்.

செல்வி. பொ.சசிகலா
இந்து கலாசார உத்தியோகத்தர்

கோறளைப்பற்று பிரதேச சிறு கைத்தொழில்

கோறளைப்பற்று பிரதேச வாழ் மக்களிடம் காணப்படும்

திருமண நடைமுறைகள்

திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர் என்றும் இருமனத்தின் கலப்பு என்றும் பல கருத்துக்கள் கூறினாலும்....

'யாயும் ஞாயும் யாராகியரோ
ஏந்தையும் நுந்தையும் எவ்வழியறிதும்"

என்பது குறுந்தொகையின் 140வது பாடல். ஒன்று பட்டு வாழ முனையும் ஆணையும் பெண்ணையும் இணைத்து வைக்கும் வாழ்க்கைச்சடங்கு திருமணமாகும். இதனை மட்டக்களப்பு வாழ் மக்கள் கல்யாணம் என்னும் வடமொழிச் சொல்லாலும் அழைப்பது பெரும்பாலும் வழக்கமாக உள்ளது. இத் திருமணத்தை பல தரப்பட்ட இனங்களும் மதங்களும் ஏற்றுக் கொண்டாலும்; தங்களின் மதங்களுக்கும் இனங்களுக்கும் ஏற்ப அவை முற்றிலும் சில வேறுபாடுகளையும் நடை முறையில் உள்ள மாற்றங்களையும் கொண்டுள்ளதை காணலாம். இத்திருமணத்தினை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. மரபு வழித் திருமணம்
2. மரபுக்கு அப்பாற்பட்ட திருமணம்.

மரபு வழித்திருமணமென்பது பெரியோர்களாலும், பெற்றோர்களாலும் உறவினர்களாலும், நிச்சயிக்கப்பட்டு தங்களின் சமய சம்பிரதாயப்படி நடாத்தி வைக்கும் புனித சடங்காகும்.

மரபுக்கு அப்பாற்பட்ட திருமணமென்பது காதல் திருமணம் ஆகும். களவுத் தொடர்பை பிறர் கண்டு சேர்த்து வைத்தல், விதவைகள் திருமணம் எனபன இதில் அடங்கும். இவ்வாறு காணப்படும் திருமணங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. நம் கோறளைப்பற்று பிரதேசத்திலும் கூட இந்துக்கள், கிறிஸ்தவர்க்ள் பரந்து வாழ்கிறார்கள். இவர்களின் திருமணங்கள் மரபுக்கும் மரபுக்கு அப்பாற்பட்ட திருமணங்கள் என அமைந்த போதும், இன்றைய கால கட்டத்தைப் பொறுத்தவரை மரபுக்கப்பாற்பட்ட திருமணங்கள் கூட மரபுக்கு ஏற்றவாறு தமது சம்பிரதாயங்களுக்கு ஏற்பவே பெரும்பாலான திருமணங்கள் அமைவதைக் காணலாம்.

முதலாவதாக இந்துக்களின் திருமண நடைமுறையினை எடுத்துக் கொண்டால்...., சில நடைமுறைகள் உண்டு அவையாவன.

1. கேட்டுப் போதல்
2. திருமணப் பேச்சு வார்த்தை
3. நல்ல நாட்குறித்தல்
4. ஜாதகப் பொருத்தம் பார்த்தல்
5. மோதிரம் மாற்றுதல்
6. மணவறை அமைத்தல்
7. மணமகன்- மணமகளுக்கு தோழனும் தோழியும் இருத்தல்
8. திருமண பத்திரிகை வைத்தல்
9. திருமணப்பதிவு
10. கைப்பிடித்தல்
11. கலத்தில் போடுதல்
12. கால் மாறிப்போதல்

என்பன முக்கியமாக இந்துக்களிடம் காணப்படும் நிகழ்வுகளாகும். எல்லாத் திருமண வைபவங்களிலும் பொதுவாக தமது குலகோத்திரம் என்பவற்றிற்கு பொருத்தமானவரைத் தேர்ந்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும். இதன் படி தாம் தெரிவு செய்பவரின் விருப்பினைப் பெற தம் குடும்பத்தில் அல்லது உறவினர்களில் மூத்தவர் ஒருவரை மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். அங்கு சம்மதம் தெரிவிக்கும் இடத்து தங்களின் நடைமுறைக்கேற்ப கேட்டுப் போவார்கள்

இவ்வாறு போகும் போது 3அல்லது 5 பெட்டி என்ற அடிப்படையில் தின் பண்டங்களும் வாழைப்பழம், கொழுக்கட்டை, வட்டா என்பன இதில் அடங்கும். முக்கியமாக மாப்பிள்ளை கொழுக்கட்டை என்று பெரிதாக அவிக்கப்பட்டு அதனுள் மோதிரம் வைக்கப்படுவது வழக்கமாகும். இவ் மோதிரத்தை மாப்பிள்ளை அணிந்திருப்பார் இது மாப்பிள்ளைக்கு திருமணம் நிச்சயமாகி விட்டது என்பதனை எடுத்துக் காட்டுவது ஆகும். இவ் வைபவத்தில் சுமங்கலிப் பெண்களும் ஆண்களும் தான் கலந்து கொள்வார்கள் இது மிகவும் சிறப்புக்குரிய அம்சமாகும். இதில் திருமணப் பேச்சு வார்த்தை நடாத்தப்பபடும்.

முக்கியமாக தமிழ் மக்களிடையே வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படும். பெண்ணாக இருப்பினுன் 18 வயது நிரம்பியவளாகவும் ஆணாக இருப்பின் 22 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். அதைவிட உறவு முறை பார்க்கப்படும். பெண்ணிற்கு முறை மச்சானாக இருத்தல் வேண்டும். அதாவது தாய் மாமன் மகனாகவும் (மாமி மகனாகவும் இருத்தல் வேண்டும்) அப்படி இல்லாத பட்சத்தில் வெளியாட்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது தமது உறவினை ஏற்படுத்திக் கொள்வார்கள். இப் பேச்சு வார்த்தையின் போது முக்கியமாக சீதனம் சம்பந்தமாக உரையாடப்படும்.

சீதனம்

சீதனம் என்பது இலட்சுமி கரம் பொருந்திய பணம் எனப் பொருள்படும். திருமணத்தின் போது பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கு கொடுக்கும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும், நன் கொடைப் பணமும் நகைகளும், வீடு, காணி; தோட்டம்; ஆடு மாடு; வாகனம் என்பன இதில் அடங்கும். எல்லாம் சுபமாக அமையும் பட்சத்தில் நல்ல நாள் குறிக்கப்படும்.

நல்ல நாட் குறித்தல்

நாள் குறித்தல் என்பது வயல் விதைப்பு அறுவடைக் காலமான வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை ஆகிய மாதங்களை தேர்ந்தெடுத்து அதில் ஓர் நல்ல நாளை தெரிவு செய்து திகதி குறிக்கப்படும். இத்திகதி குறிக்கப்படும் பட்சத்தில் ஜாதகப் பொருத்தம் பார்ப்பது மிகவும் வழக்கமாக உள்ளது.

ஜாதகப் பொருத்தம் பார்த்தல்

பொருத்தம் பார்க்கும் வழக்கம் நம் பிரதேச மக்களிடம் அநேகமாக காணப்படும் விடயமாகும். இதனைக் கணிப்பதற்காக ஜோதிடரை நாடி மணமகன் மணமகளின் பிறந்த ஆண்டு, மாதம், திகதி, நேரம் என்பன சரியாக கணிக்கப்பட்டு இருவருக்கும் பொருத்தம் உள்ளதா? என்பதை கவனத்தில் கொள்ளப்படும். மணமக்களின் பொருத்தம் என்பது தொண்ணூறு வீதம் ஒத்துப் போனால் மிகவும் ராசியான அதிர்ஷ்டமான ஜோடிப் பொருத்தம் என ஆனந்தம் அடைவார்கள் இவ்விடயத்திற்கு பெண் மாப்பிள்ளை வீட்டார் இரு உறவுகளுமே செல்வது வழக்கமாகும்.

திருமண பத்திரிகை வைத்தல்.

இரு வீட்டாரும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகவோ பத்திரிகை அச்சடித்துப் பத்து நாட்களுக்கு அல்லது ஒரு வாரத்திற்கு முன்பே தமது உற்றார் உறவினர், நண்பர்கள், ஊரவர்களுக்கு திருமணச் செய்தியை அறிவிக்கும் பொருட்டும். திருமண வைபவத்தில் கலந்து கொள்ளும் பொருட்டும்; அன்புடனும் பணிவுடனும் வழங்கப்படுவது பத்திரிகை வைத்தல் எனப்படும்.

இவ்வாறாக திருமணத்தின் சில விடயங்கள் கவனத்தில் கொள்ளும் போது தாலிக்கு பொன் உருக்கும் வைபவம் நடை பெறும். இது நல்ல நாளில் நகைக் கடையில் பொன் உருக்கி தாலி செய்யப்படும். இச்சந்தர்ப்பங்களில் மணமகன் மணமகளுக்கு முகூர்த்தப்புடைவை என்று புதிதாக எடுக்கப்படும். தொடர்ந்து திருமணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்பு திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு பெண் வீட்டில் 'கன்னிக்கால்' நாட்டும் வைபவமும் மணவறைக்கு முன்பாக கலியாண முருங்கை நடப்பட்டு புதுத்துணி சுற்றப்படும். பின் திருமணத்திற்கு முதல் நாள் மணவறை அமைக்கப்படும். இதனை நம் பேச்சு வழக்கில் பந்தல் போடுதல் என்று அழைப்பார்கள். பெரும்பாலான திருமணங்கள் தங்களின் வசதிக் கேற்றவாறு வீட்டிலோ ஆலயங்களிலோ நடத்தப்படும். விசேடமாக இந்துக்கள் ஆலயங்களில் பெரும்பாலும் பிள்ளையார் கோயில்களில் நடைபெறுவதை அநேகமாக அவதானிக்க முடியும்.

ஆலயங்களில் நடைபெறும் திருமணமாயின் குறிக்கப்பட்ட இடத்தில் ஓமகுணலம் வளர்க்கப்படும். வேதம் ஓதும் பிராமணர்கள் அல்லது குருக்கள் இவ் ஓமத்தீயை பல வகைக் குச்சிகளும் நவ தானியங்களும் சேர்த்து வளர்ப்பார். அதற்கு அருகாமையில் மணமகன் அமர்ந்திருக்க பின் மணமகள் அழைத்து வரப்பட்டு மணமகனின் இடப்பக்கமாக அமர்த்தப்படுவார். இது வழக்கமாகும் தொடர்ந்து முகூர்த்தப் புடைவை இதனை கூறை என்பார்கள். இதனை மணமகன் மணமகளுக்கு போர்த்தி விட பெண்ணும் மாப்பிள்ளைக்கு அவரது வேட்டி சால்வைகளை போர்த்தி விடுவார்கள். இருவரும் உடை மாற்றிய பின்பு சபையில் உள்ள பெரியவர் ஒருவர் மங்களப் பொருளுடன் கூடிய தாலிக் கொடியை சபையோரின் ஆசிர்வாதத்திற்காக எடுத்துச் செல்வார். ஆசிர்வதிக்கப்பட்ட தாலி மங்கல வாத்தியம் முழங்க குருக்களின் மந்திரங்களுடன் குறிப்பிட்ட நேரத்றதிற்குள் மணமகள் கழுத்தில் மணமகன் தாலியை அணிவிப்பார். இதனையடுத்து இருவரும் ஒருவருக் கொருவர் மாலை மாற்றிக் கொள்வார்கள். பின்னர் பெண்ணின் தகப்பனார் தெய்வம் சாட்சியாக அக்கினி சாட்சியாக கைப்பிடித்துக் கொடுப்பார்.அதன் பின் மணமக்கள் விவாகப்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோ அல்லது பதிவாளரை வீட்டிற்கு அழைத்தோ விவாகப்பதிவு நடைபெறும். இதில் முக்கியமாக மணமகன் தரப்பில் இருந்து ஒருவரும் மணமகள் தரப்பிலிருந்து ஒருவரும் சாட்சிகளாக பதிவு இடம்பெறும்.

இவ்வாறு ஆலயங்களில் இடம்பெறும் திருமண தம்பதியர் ஆறு மாத காலங்களுக்கு கோயிற் வாசப்படி தாண்டக் கூடாது என்பது பெரியவர்களின் கருத்தாகும். இவ்வாறு நடைபெற்ற பின் கலத்தில் போடும் வைபவம் நடைபெறும். இது பெரும்பாலும் எல்லோராலும் கடைப்பிடிக்கப்படும் முக்கியமான விடயமாகும்.

கலத்தில் போடுதல்

கலத்தில் போடும் போது கமுகம்பூச்சம்பா அரிசிச் சோற்றுடன் ஏழு மரக்கறி சேர்ந்த கறியுடன் தயிர், கூழ், பழம், பலகாரம் என்பவற்றுடன் மணமகன் அவ்வுணவில் சிறிது எடுத்து ஒன்று சேர்த்து மணமகளுக்கு 3 வாய் கொடுப்பார். இதைத் தொடர்ந்து மணமகளும் மணமகனுக்கு 3 வாய் ஊட்டுவார். இவ்வாறு ஒரு பாத்திரத்தில் இருவரும் உண்பதே கலத்தில் போடுதல் ஆகும். இக்கலத்தில் போடும் பழக்கம் அன்று தொடக்கம் இன்று வரை கடைப்பிடித்து வந்தாலும் தற்போதைய காலகட்டத்தில் முற்றிலும் மாறுபடுவதைக் காணலாம்.

மணமக்களுக்கு கலத்தில் போடும் போது சபையோருக்கும் வாழ்த்த வந்த உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் விருந்துபசாரம் நடைபெறும். முக்கியமாக கலத்தில் போடும் உணவில் மச்சம் மாமிசம் மது ஊற்றிக் கொள்ளப்படமாட்டாது. ஆனால் சபையோருக்கு மாமிசம் மது என்பன முக்கியமென்பது தற்போது நடைமுறையில் உள்ளது எனலாம். அதன் பின் உறவினர்களும் சொந்த பந்தங்களினாலும் மணமக்களுக்கு வாழ்த்துக்களும் பரிசுப் பொருட்களும் வழங்குவது இங்கு இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

கால்மாறிப் போதல்

இதுவே இந்துக்களின் தற்கால நடைமுறையில் காணப்படும் நிகழ்வாகும் திருமணம் முடிந்து மூன்று நாட்களின் பின் மணமகனின் தாய் வீட்டிற்கு மணமக்கள் இருவரும் முதல் முறையாக செல்வதாகும். இவ்வாறு செல்லும் போது பெண் வீட்டார் சிலரும் செல்வார்கள். அத்தோடு பழம் பலகார வகை இனிப்புப் பண்டங்கள் கொண்டு செல்வது வழக்கமாகும். இது நடைமுறையில் உள்ளதென்று கூறலாம். ஆனால் திருமணமான தம்பதியினர் கால்மாறிப் போக தாமதிக்கும் பட்சத்தில் மணமகள் கருவுற்றிருந்தால் இவ்வாறு கால்மாறிப்போவது தடைப்படும். மீண்டும் குழந்தை பிறந்த பின் கால் மாறிப்போகும் பழக்கத்தினை ஆங்காங்கே காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு இந்துக்களின் திருமண நடைமுறையில் நிகழ்வதாகும். ஆனால் பல திருமணங்கள் சமய சம்பிரதாயப்படி நடைபெறுவதில்லை. முற்றிலும் மாறுபடட்ட நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதையும் அவதானிக்கலாம். ஆனால் ஒரு சாதாரண திருமணம் இவ்வாறு நடைமுறையில் உள்ளதென்பது கருத்தாகும்.

கிறிஸ்தவ (பறங்கியரின்) திருமண நடைமுறை

இலங்கை வரலாற்றில் பறங்கியின மக்கள் மேல் நாட்டவரின் வருகைக்குப் பின்னரே வாழும் ஒரு பிரிவினராவார்கள். இவர்களில் திருமணம் அனேகமானவை தங்கள் இனத்திற்குள்ளே இடம்பெறும். எனினும் பறங்கியரின் திருமணத்தில் இந்துக்களை விட சில மாற்றங்கள் முற்றிலும் வேறுபட்டவையாக காணப்படுகின்றது. இந்துக்களைப் போன்று இவர்களும் சகல கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கிறார்கள். அவையாவன

பெண்பார்த்தல்

பாவ சங்கீர்த்தனம்

முதலாம் கூறல்

திருமணப்பதிவு

மோதிரம் மாற்றுதல்

கைப்பிடித்துக் கொடுத்தல்

பூ மாற்றும் சடங்கு

கால் மாறிப் போதல் என்பனவாகும்.

மாப்பிள்ளை பார்த்தல்

முதலில் பெண் வீட்டாரே திருமணம் பேசுவார்கள். தங்களுக்கு தெரிந்தவர்களின் மூலம் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று அவரைப்பற்றி நன்கறிந்த பின் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று பெற்றோரின் சம்மதத்தினைப் பெறுவார்கள் சம்மதம் என்று மாப்பிள்ளை வீட்டார் கூறியதும் தங்களுக்கு நாள் அல்லது நல்ல நாள் பார்த்து தங்களின் வசதிக்கேற்ப குடிவகைகளுடன் மாப்பிள்ளைக்கு அன்பளிப்பாக சேட், காற்சட்டை, முதலியவற்றைக் கொண்டு செல்வது இவர்களின் சம்பிரதமாகும். வசதியற்றவர்கள் ஒரு சாராயப் போத்தலேனும் கொண்டு செல்வது முக்கியமாக குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு இரு தரப்பினருக்கு பூரண சம்மதம் கிடைக்கும் பட்சத்தில் தங்களின் தேவாலய பாதிரியாரிடம் அறிவிக்கப்படும்.

அதுபோன்று மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டிற்கு போகும் போது குடி வகைகளுடனும் பெண்ணிற்கு அன்பளிப்பாக சட்டையும் கொண்டு செல்வது வழக்கமாகும். அத்துடன் சீதனம் பற்றியும் பேசுவார்கள் இவர்கள் திருமணத்திற்கு நல்ல நாள் பார்க்க சாஸ்திரி மாரை நாடுவது மிக மிகக் குறைவு ஆனால் இன்று சிலர் அதைக்கடைப்பிடிக்கிறார்கள். இதன் பின் தங்கள் ஆலய குருவான பாதிரியாரிடம் அறிவிக்கப்படும்.

பாவசங்கீர்த்தனம்

தேவாலய பாதிரியார் மணமக்களாகப் போகும் இருவரையும் தனித்தனியே அழைத்து சம்மதத்தினைப் பெறுவர். அதன்பின் ஆணும் பெண்ணும் தனித்தனியே தங்கள்குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் என்னும் பாவமன்னிப்பு பெறுவார்கள். அதன் பின் மணமக்களாக போகும் இருவரும் பரிசுத்தமாக இருப்பதுடன் தங்களின் திருமண சம்மதத்தின் ஒப்புதலை குருவானவரிடம் கூறுவார்கள். இதனை வார்த்தைப்பாடு என்றழைப்பார்கள்.

முதலாம் கூறல்

திருமண செய்தியினை தங்கள் ஆலய சபையோருக்கு அறிவிக்கப்படுவது முதலாம் கூறல் எனப்படும். இவ்வறிவிப்பினை பாதிரியாரே அறிவிப்பார்கள். அத்துடன் இவ்வார்த்தைப்பாட்டுக்காரர்கள் பற்றி ஏதும் வியாக்கியானங்கள் இருக்குமாயின் அக்கோயிற் கிறிஸ்தவர்கள் அந்தக் கட்டளைக் குருவானவரிடம் அறிவிக்க விசேட கடமைப்பட்டவர்களாக உள்ளார்கள். இது முதலாம் கூறல் என்றும் அழைப்பார்கள் இவ்வாறு தொடர்ந்து வரும் 3 ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் விசேடமாக இந்நிகழ்வில் கவனிக்கப்படுவது யாதெனில் மணமக்களாகப் போகும் இருவருக்கும் இரத்த உறவு தொடர்பான முறையீனங்கள் உள்ளனவா என்றும் அந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்கனவே உடல் உறவு இருக்கின்றதா என்றும் முக்கியமாக விசாரிக்கப்படும். இவ்வாறு பிரச்சினைகள் ஏதும் இருக்குமிடத்து அத்திருமணம் தடைப்பட வாய்ப்புண்டு. இத்திருமணச்சடங்கு அனைத்து கிறிஸ்தவ நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

திருமணப்பதிவு

நல்லநாள் பார்த்து திருமணப்பதிவினை அரசாங்க திருமணப்பதிவு நிலையத்தில் அல்லது வீட்டில் வைத்தும் நடத்துவார்கள் இது அவர்களின் வசதிக்கேற்றவாறு மாதிரி நடத்துவது வழக்கம். திருமணப்பதிவு முடித்த பின் மோதிரம் மாற்றும் வைபவம் இடம்பெறும்.

மோதிரம் மாற்றுதல்

விசேடமாக மோதிரம் மாற்றுதல் ஆலயங்களில் நடைபெறுவது வழக்கம். பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு ஒரு மோதிரத்தையும் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு ஒரு மோதிரத்தையும் கொண்டு செல்வார்கள். மோதிரம் மாற்றும் சடங்கு ஆலயத்தில் ஒன்று கூடியிருக்கும் சபையோர் மத்தியில் உற்றார் உறவினர் மத்தியிலும் நடைபெறும். மீண்டும் இருவருக்கும் விருப்பமா என்று பாதிரியார் கேட்பார்.அதன்பின் பாதிரியாரால் அம் மோதிரங்களை ஆசீர்வதித்து முதலில் மாப்பிள்ளை பெண்ணுக்கும் ,பின் பெண் மாப்பிள்ளைக்கும் மோதிரத்தை மாற்றுவது வழக்கமாகும். இவ்வைபவத்தின் விசேடம் என்னவெனில் இந்துக்களைப் போன்று தாலிகட்டும் வழக்கம் இல்லை ஆகையால் மோதிரம் மாற்றுவது மிகவும் விசேடம் என்பதாகும்.



திருமணத்திற்கு முதல் நாள் பெண் வீட்டில் மணவறை அமைக்கப்படும். இவ் மணவறையை மாப்பிள்ளை, வீட்டார்கள் சேர்ந்தே சோடிப்பார்கள். விசேடமாக மாப்பிள்ளைக்கு தோழனும் பெண்ணுக்கு தோழி வைப்பதும் வழக்கமாகும். திருமணத்திற்கு முதல் நாள் பின்னேரம் மணமகனின் சகோதரியும் அவளது கணவனும் மாப்பிள்ளையும் உடுப்பு பெட்டியினை மணமகளிடம் கொண்டு கொடுக்க மணமகள் மணமகனின் கோட்டிற்குரிய பூச் செண்டைக் கொடுப்பார். இது போன்று மாப்பிள்ளைத் தோழன் தோழி இருவரும் கோட், பூச்செண்டு என்பனவற்றை தமக்குள் பரிமாறிக் கொள்வார்கள்

அமைக்கப்பட்ட மணவறையில் பெண்ணின் தகப்பனார் பெண்ணை அழைத்து வந்து அமரவைப்பார். இது அவரின் கடமையாகும் மணப்பெண் தனக்கென தைக்கப்பட்ட வெள்ளை ஆடையை அணிந்திருப்பார். அப்போது மணமகனின் மச்சான் முறையான ஒருவர் மணமகளின் கையில் ஓர் கைக்குட்டையைப் போட மாப்பிள்ளை அதை எடுத்து விடுவார் பின் குடிபானங்கள் அருந்துவது வழக்கமாகும்.

கைப்பிடித்துக் கொடுத்தல்

பொதுவாக இவ் வைபவம் தேவாலயத்திலே இடம் பெறும் பூசையின் போது குருவானவர் மாப்பிள்ளையின் தாய் தந்தை பெண்ணின் தாய் தகப்பன் ஆகியோரின் சாட்சிகளையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் மீண்டும் மணமக்களிடம் சம்மதம் கேட்டு பின் பாதிரியார் அவர்கள் கரங்களை இணைத்து விடுவார். இது மிகவும் முக்கியமான விசேட நிகழ்வாகும். இவ்வேளையில் கோயில் மணி அடிக்கப்படும், பட்டாசுகள் கொழுத்தப்படும். மீண்டும் அவர்களின் மோதிரங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு மாற்றப்படும். பின்னர் பூஜைப்பலி கொடுக்கப்படும். பூஜை நடுவில் மணமக்களுக்கு தேவ நற்கருணை இடம்பெறும். பூசை முடிவில் மணமக்கள் அவர்களது பெற்றோர்களால் முத்தமிட்டு கைகுலுக்கி ஆசிர்வதிக்கப்படுவார்கள். இது பறங்கியர் கடைப்பிடிக்கும் அம்சமாகும்.

அதன் பின் கோயிற் திருமணப்பதிவு இடம் பெறும் அதனையடுத்து சீனி முட்டை பழ வகைகள் முதலியவற்றுடன் அதனை தட்டுக்களில் மூடி குருவானவர் பாதங்களில் வைத்து அவரது ஆசியைப் பெறுவது வழக்கத்தில் உள்ளது.



பூ மாற்றும் சடங்கு

மணமகன் மணமகள் அவரவர் இடப்பக்கத்தில் வைத்திருக்கும் பூக்களை மணமகன் மணமகளுக்கும் மணமகள் மணமகனுக்கும் மாற்றி விடுவார்கள் இப்பூ மாற்றுவது தாங்கள் கணவன் மனைவி ஆனதற்கான அறிகுறியாகும். இப் பூ மாற்றும் வைபவம் முடிவுற்றதும். கேக் வெட்டப்படும் கேக்கின் ஒரு புறத்தில் கத்தியும் மறு புரத்தில் முள்ளுக்கரண்டியும் வைத்திருப்பார்கள். மணமகள் முள்ளுக்கரண்டியை கேக் மீது குத்திவிடுவாள். மணமகன் கேக்கை கத்தியால் குத்தி விடுவார். இவர்களே தமக்குள் பரிமாற சபையோருக் கென வேறு கேக் வைன் குடிபானங்கள் இனிப்புப் பண்டங்கள் பரிமாறப்பட்டு விருந்து நடைபெறும் இங்கு குடிபானங்களின் செலவு மாப்பிள்ளையே சாரும்.

இதனைத்தெடர்ந்து பறங்கியரின் பாரம்பரிய நடனம் நடைபெறும். மணமக்களைத் தவிர சகலரும் கலந்து கொள்வார்கள். பிரதானமாக இசைக்கருவிகள் பயன் படுத் தப் படும் மணமக் களை நித் திரைக் காக அனுப் புவதற் கும் துயிலெழுப்புவதற்கும் இசைக்கருவிகள் மூலம் பாடல்கள் பாடுவார்கள்

கால் மாறிப் போதல்

திருமணம் நடைவுற்று முதல்வரும் ஞாயிற்றுக்கிழமை மணமக்கள் கோயிலுக்கு சென்று பூசையின் கலந்து கொள்வார்கள் இதன் போது மாப்பிள்ளை பெண்ணைத் தன் வீட்டிற்கு உற்றார் உறவினர் என சூழ அழைத்துச் செல்வார் இது கால் மாறிப் போதல் எனப்படும்.

இவ் வாறு பறங் கியரின் திருமண நடைமுறை சற்று வித்தியாசமென்றாலும்.எல்லாத்திருமணங்களிலும் நடைபெறும் மோதிரம் மாற்றும் வைபவம் முக்கியமாக இடம்பெறுகிறது.

இவை எமது பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் திருமண முறைகளாகும்

திருமதி.யேசுமிதா டனி
முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச செயலகம்- வாழைச்சேனை

கோறளைப்பற்று பிரதேச ஆயுர்வேதம்

அறிவைக் கொண்டு ஒன்றை ஆராய்வது அறிவியலாகும் பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுவதே அறிவியல் ஆக்கத்திற்கு அடிகோலுவதுடன் ஆய்வுச்சிந்தனை அடிப்படையில் முடிவுகளை முன்வைக்கின்றது. இதனால் அறிவியல் விஞ்ஞானம் எனவும் அழைக்கப்படலாயிற்று.

இவ்வறிவியல் முறை சார்ந்த, அறிவியல் முறைசாரா அறிவியல் என இரு வகையில் நோக்கப்படுகின்றது. இவ்வகையினுள் முறைசார்ந்த அறிவியலில் அடங்குவதே மருத்துவம் எனும் துறையாகும். பண்டைக்காலம் தொட்டே இந்து நாகரிக சிந்தனை மூலகங்களில் மருத்துவச் சிந்தனையும் ஒன்றாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. அவ்வகையிலே ஆயுர்வேதம் (அலோபதி) சித்தமருத்துவம் (அக்குபஞ்சர்) கைதடி சித்த மருத்துவம் போன்ற மருத்துவச் சிந்தனைகள் தமிழர்தம் பணபாட்டுடன் இன்று வரை வளர்ச்சி கொண்டு வருகிறது.

மருத்துவம் என்றால் என்ன என்பதற்கான ஒரு சிறு விளக்கத்தினை நோக்கின் நோயை அறிதலும் அதற்கான காரணம் கண்டு அறிதலும் அதனை தனித்து அல்லது நீக்குதல் பற்றி ஆராய்வதே மருத்துவம் எனலாம். இந்த மருத்துவ சிந்தனை வளர்ச்சி எமது கோறளைப்பற்று பிரதேசத்திலும் காலாகாலமாக கட்டி எழுப்பப்பட்டு பல மருத்துவ முறைகளாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. அந்த சிந்தனையில் ஒன்றுதான் ஆயுர்வேதம் எனும் மருத்துவ முறையாகும்.

இந்த ஆயுர்வேத மருத்துவமானது இன்று நாம் அறிந்த வகையில் கோறளைப்பற்று பிரதேசத்தில் ஒன்பதாவது தலைமுறையினர் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இதனை இக்கட்டுரையின் வாயிலாக நோக்குவோம்.

ஆயுர்வேதம் என்ற மருத்துவம் இவ்வுலகிற்கு பிரமனால் உருவாக்கப்பட்டு அனுப்பப்பட்டது எனக் கருதப்படுகின்றது. இம்மருத்துவத்தின் திறவு கோலாக இருந்தது ஆயுர்வேதம் என்ற மருத்துவ நூலாகும் இது பிரபல்யமாக கொள்ளப்படுகின்றது. இதனை உலகிற்கு கொடுத்தவர்கள் ஆத்திரேயர், தன்வந்திரி ஆகிய ஆசிரியர்களாவார். இவர்களில் ஆயுர்வேதத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் தன் வந்திரி என்பவர் . இவரின் வழிவந்த இந்த மருத்துவம் கோறளைப்பற்று பிரதேசத்திலும் சிறப்புற்று விளங்கியது. இதனை முன்னெடுத்து சென்றவர்கள் சிதம்பரநாத பரிசாரியார் குடும்பத்தினர். அவர்களின் ஒன்பதாவது தலைமுறையினராக இன்று கோறளைப்பற்று பிரதேசத்தில் ஆயுர்வேத மருத்துவத்தினை முன்னெடுத்துச் செல்பவர் செல்வி முத்தையா சறோஜா தேவி என்பவராவார். அவரைச் சந்தித்த வேளை கிடைத்த சில தகவல்களை இக்கட்டுரையினூடாக தருகின்றேன்.

இப்பிரதேசத்தில் வாழையடி வாழையாக பரிசாரியார் பரம்பரையில் சிதம்பர நாதர் பரிசாரியார் அதன் பின் சின்னத்தம்பி பரிசாரியார் அவரின் மகனான முத்தையா பரிசாரியார் என தந்தையின் பின் தனையன் எனும் முடியாட்சி முறைபோலவும் பரம்பரை பரம்பரையாக தந்தைக்குப் பின் மகன் என மருத்துவ சேவை மக்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1954ல் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட ஒரு ஆயுர் வேத வைத்தியராக திரு. சின்னத்தம்பி முத்தையா விளங்கினார். இவர் தன் தந்தையிடம் கற்றதன் ஊடாகவும் அனுபவத்தின் முதிர்ச்சியாலும். இவ் வைத்தியத்தினைப் பயின்று செய்தார் பனையோலையில் எழுதப்பட்ட புள்ளிகள் இடப்படாத 19ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதான மூல ஏடுகள் இன்றும் அவர்களின் வசம் உள்ளது. ஆனால் அதனை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாமல் இருப்பதாக அவர் தெரிவித்தார். வைத்திய நூலும் இருந்ததாகவும் அது தற்போது கைமாறி விட்டதாகவும் கூறினார்.

திரு சி. முத்தையாவினைத் தொடர்ந்து அவரின் மனைவியான திருமதி. தெய்வானப்பிள்ளை முத்தையா அவர்களும் 1968ல் தன்னை ஆயுர்வேத வைத்தியராக அரசாங்கத்திடம் அனுமதி பெற்று வைத்தியத்தை மேற்கொண்டார். இவரின் பதிவு இல: 2489 என்பதாகும். இவரின் மறைவின் பின் இன்று வரை அவரின் மகளான செல்வி.மு.சரோஜினி தேவி இவ் வைத்தியத்தினை மேற்கொண்டு வருகிறார்.

ஆயுர்வேத மருத்துவத்தில் சிகிச்சைகள் செய்யப்படும் நோய்களாக வாதம், பேதி, கட்டு கிரந்தி, சளித்தடுமல், தலையிடி இவற்றுடன் சிறப்பாக மகப்பேற்று வைத்தியம் என பல தரப்பட்ட வைத்திய முறைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இவற்றுக்கான மருந்தானது கடைச்சரக்கு மூலிகை வகைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இச்சரக்கு வகைகளும் சில மூலிகைகளும் இந்தியாவில் இருந்து இன்று வரை பெறப்பட்டு வந்துள்ளது. ஆனால் அதன் வரவும் இச்சரக்குகள் கிடைப்பதும் இன்று அரிதாகி விட்டது. இதனால் மருந்து வகைகளைத் தயாரிப்பதில் பல சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றது.

இனி நாம் கோறளைப்பற்று பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் வைத்திய முறையினை நோக்கின் மக்களுக்கு பரவலாக ஏற்படும் வாதம் எனும் நோயினையும் அதற்கான சிகிச்சை முறையினையும் பார்ப்போம். வாதம் ஏற்படும் ஒருவருக்கு, தயாரிக்கப்பட்ட எண்ணெய் பூசல், ஒத்துக்கட்டி அடித்தல், மூலிகையை வாட்டி இழுத்தல் என பல சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றது. பெரிய எண்ணெய் என அழைக்கப்படும் ஒரு வகை எண்ணெயை சூடு காட்டிப் பூசுதல் வேண்டும். இவ்வெண்ணெய் மூலிகைகளாலும் கடைச்சரக்கு எனப்படும் பொருள்களை கொண்டும் தயாரிக்கப்படுகிறது.

குதி வாதம் எனும் நோய்க்கு செங்கல்லினைச் சுட்டடிக் அதில் பசுவின் சாணத்தினை தப்பி எருக்கலம் இலைகள் ஒன்பதினை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி குதிகாலை தூக்கி அதில் வைத்து இழுக்க இழுக்க சூடு ஆற ஆற ஒவ்வொரு இலையாக எடுத்துப் போடுதல் வேண்டும் அவ்வாறு செய்யின் குதிவாதம் நீங்கும் இதனை நாமும் தனியே செய்து கொள்ளமுடியும்.

வாத நோய்க்கான மற்றொரு சிகிச்சை முறை சுட்டிக்காட்டி அடித்தல் ஒத்தடம் போடலாகும். இம்முடிச்சுக்கட்டி அடித்தல் இரு முறையில் மேற்கொள்ளப்படும். ஒன்று முடிச்சினை அவித்து அடித்தல் மற்றயது எண்ணெய்யைக் கொதிக்கவைத்து முடிச்சினை அதில் பொரிய வைத்து எடுத்தலாகும். இம் முடிச்சு எனப்படுவது பல தரப்பட்ட மூலிகைகளும் சேர்க்கப்பட்டு கடைச்சரக்குகளும் சேர்த்து அதாவது கொட்டைத் தேங்காய் இலுப்பை பிண்ணாக்கு சேர்த்து உரலில் இடித்து முடிச்சுக் கட்டி எடுத்தலாகும். அதனை அவித்து அல்லது நல்லெண்ணெயில் சூடுகாட்டி ஒத்தடம் கொடுக்க வாத நோய் வந்த இடம் தெரியாமல் குணமாகும்.

வாத நோயாளர் குளிர்த்தன்மையான உணவுப் பொருட்களை தவிர்த்தல் வேண்டும். (வெண்டி, நாடை, சுரை, கீரைவகை, வெள்ளரி, கெக்கரி போன்றன)

கட்டுக்கள் கிரந்திகள் எனப்படும் நோயானது தோல்படையில் கிருமிகள் படியும் போது ஏற்படுகின்றது. அத்தோடு ஒவ்வாத உணவுப்பழக்கங்களால் உண்டாகின்றது. குழந்தை பிறந்தவுடன் வரும் கிரந்தி செவ்வார்ப்பு கிரந்தி என அழைக்கப்படுகிறது. இக்கிரந்திகளுக்கு எண்ணெய் பூசப்படுகின்றது. அத்துடன் மூலிகையில் தயாரிக்கப்பட்ட குளிசைகள் உட்கொள்ளவும் கொடுக்கப்படுகின்றது. இவ்வைத்திய முறையினை மேற்கொள்வோர் கிரந்தி தன்மையான சாப்பாடுகளை தவிர்த்தல் வேண்டும்.

கட்டுக்களானது ஒவ்வாத தன்மையாலும் உடலில் அடிகள் பட்டாலும் உருவாகின்றது. இதற்கு காட்டு எண்ணெய் பூசப்படுகின்றது. இவ் வெண்ணெய் தயாரிக்க அவுரி, விராலி, நொச்சி, ஆடா தோடை எருக்கிலை, கிளிசேரியா, பொடுதல் கடுப்பு மூலிகை, குப்பை மேனி, எருக்கிலை வேர், போன்ற மூலிகைகள் பயன்படுத்தப் படுகின்றது.

கடுமையான கட்டு வந்தால் பத்தியம் எனப்படும் மருந்துண்ணும் வழக்கத்தினைக் கடைப்பிடித்தல் வேண்டும். அதாவது தேங்காய்ப்பாலினை குறைத்து தண்ணிப்பாலில் கறி சமைத்துண்பதோடு புளி வகைகளையும் தவிர்த்தல் வேண்டும். கொறுக்காய்ப்புளியைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் பழப்புளி, தேசிப்புளிஎன்பன தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

பேதி நோய்க்கான சிகிச்சை முறையாக மூலிகையின் மூலம் கடைச்சரக்கு சேர்த்து தயாரிக்கப்படும் ஒரு வகையான குளிசை பாவிக்கப்படுகிறது. மூலிகைகளை அரைத்து அதன் சாற்றில் தயாரிப்பதாகும் இக் குளிசை பெரியவர்கள் சிறியவர்களுக்கு என தயாரிக்கப்படுகின்றது. இக்குளிசையுடன் எண்ணெயும் குடிக்கக் கொடுக்கப்படுகின்றது.



மிகவும் சிறப்பான ஒரு முறையாக இன்றும் எல்லோராலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மருத்துவ முறையானது மகப்பேற்று வைத்தியமாகும் நவீன வைத்திய முறையில் வைத்திய சாலைகளில் பிள்ளை பிறந்தாலும் காலம் காலமாக மக்களால் பின்பற்றப்படும் தூள் சாப்பிடுதல் எனும் ஒரு பழக்கமாகும். அம்முறை இன்றும் நடை முறையில் உள்ளதை அவதானிக்கலாம். பிள்ளைகள் பிறந்தவுடன் சுவாதவடி வேர்க் கொம்பு, சூரணம், காயத்தூள் எனப்படும் மூவகையான மருந்துகளும் தயாரித்து வழங்கப்படுகிறது. உடம்பில் சுவாதம் எனும் நோய் வராமல் இருப்பதற்காகவும் வயிற்றுப்புண் ஆறுவதற்காகவும் இது கொடுக்கப்படுகின்றது. பிள்ளை பிறந்து முதல் 12 அல்லது 13 நாட்களுக்கு இம்மருந்துகளை உட்கொள்ளமுடியும். இம்மருந்து இடத்திற்கிடம் வித்தியாசப்படுகிறது. காயத்தூளானது பறங்கிக்கிழங்கு, அசமதாகம், வேலம்பட்டை, வால் மிளகு வேர்க் கொம்பு சிறிதளவு மஞ்சள் வேப்பம் பட்டை என்பன சேர்த்து இடித்து எடுக்கப்படுகின்றது. இதனை இடிகாயத்தூள் எனவும் அழைப்பர். இந்த தூள் சாப்பிடும் போது அளவானது கால் களஞ்சி அரைக்களஞ்சி என்ற அளவுகளில் உட்கொள்ளப்படும் களஞ்சி என்பது நிறுத்தல் அளவையாகும். மகப்பேற்று காலத்தில் வலியை அதிகரிக்க வைத்து பிள்ளைப் பேற்றினை இலகுவாக்குவதற்கும் 64 வாயுக்குளிசை என்பதும் தயாரித்து கொடுக்கப்படுகின்றது. இன்று இது வழக்கொழிந்து போய் விட்டது.

ஏனைய சிறு சிறு நோய்களான தலையிடி மூக்கால் நீர் வடிந்து நாசிமணத்தல், நித்திரை வராமல் இருத்தல், தலைமுடி உதிரல் போன்றவற்றிற்கும் இப்பிரதேசத்தில் மருந்துகள் செய்யப்பட்டன. அவற்றுள் நாசி மணத்தலுக்கு காய்ச்சிய எண்ணையை திரைச்சீலையில் தடவி மூக்கினுள் வைத்தால் நோய் குணமாகும் நாசி மணப்பதும் நீர் வடிதலும் நின்று விடும் நித்திரைக் குறைவுக்கு தயிருடன் பெரிய வெங்காயம் வெட்டி எடுத்து சேர்ந்து குடித்தால் சுகமான நித்திரை வரும். பித்த நோய்க்காக கையாந்தகரை எனும் மூலிகையுடன் மிளகும் சேர்த்து அரைத்து சாப்பிட பித்தம் இல்லாமல் போகும்.

இவ்வாறாக இன்னும் பல நோய்களுக்கான சிகிச்சை முறைகள் ஆயுர்வேதத்தில் செய்யப்பட்டிருப்பினும் இந்நோய்களுக்கான மருந்துகளைத் தயாரிப்பவர்கள் தங்களுக்குள்ளேயே அதனை ஒளிவு மறைவாக வைத்திருப்பதனால் இம்முறை அடுத்த தலைமுறையினருக்கு சென்றடைவதில் தடங்கல் ஏற்படுகின்றது. தாமும் பிறருக்கு அதனை சொல்லிக் கொடுப்பதனை தவிர்க்கிறார். இக்கட்டுரையிலும் எண்ணெய் கடைச்சரக்கு என்ற சொற்களில் உள்ள பொருட்களோ மூலிகைகளில் பெயர்களையோ இத்தகவல்களை தந்தவர் கூற முன் வரவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஏன் அவ்வாறு கூறத் தயங்குகிறீர்கள் என்று கேட்ட போது தான் அதனைச் சொன்னால் மற்றவர்களும் இவவைத்திய முறைகளை செய்யத் தொடங்கி விடுவர் என பதில் அளித்தமையும் இங்கு சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும். இருப்பினும் இப்பாரம்பரிய வைத்திய முறை தங்களுடன் நில்லாது தொடர்வதற்கு ஆவணை செய்யவேண்டும் என அவருக்கு கூற வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்.

வாய்நாடி வாய்ப்பச் செயல் எனும் வள்ளுவன் வாக்கிற்கு ஒப்ப நோயும் அதற்கான காரணமும் கண்டறியப்பட்டு அதனைத் தீர்மானிக்கும் வழிவகைகளையும் ஆயுர்வேதம் தன்னகத்தே கொண்டு சிறப்பான வளர்ச்சியை நோக்கி போய்க் கொண்டிருக்கும். இக்காலத்தில் அம்மருத்துவச் சிந்தனைகள் மறையாது ஏனைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இதை உணர்ந்து இப்பிரதேசத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவத்தையும் மருத்துவர்களையும் பேணிப்பாதுகாப்பது சமுதாயத்தின் கடமையாகும்

கட்டுரை ஆக்கம்
சைவப்புலவர் திருமதி.ஸோபாஜெயரஞ்சித்
மட்/கல்/ பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்.

கோறளைப்பற்று பிரதேச நாட்டுக் கூத்துக் கலை

கிண்ணையடி கிராமத்தை மையமாக கொண்ட ஓர் ஆய்வு

தமிழர்களின் மரபு சார்ந்த ஒரு கலை வடிவமான கூத்துக்கலை என்பது ஒரு தெய்வீகக் கலை எம் ஆதிமூலனாகிய சிவனை கூத்தன் என்பது இங்கு மனங் கொள்ளத்தக்கது. நாட்டுக்கூத்து பழங்காலந்தொட்டு ஆடப்பட்டு வருகின்றது. இன்றைய நகரமயமாக்கப்பட்ட இவ்வுலகிலே கலைகளை நேசிக்கும் கலைஞர்களால் இன்றும் இக் கூத்துக்கலை பல கிராமப் புறங்களில் பயிலப்படுகின்றது.

1. வரலாறு : கூத்தின் பழமை

நமது கூத்துக் கலை பல்லாண்டுக்கு மேல் பழமை வாய்ந்தது. அறுவடையின் இறுதியில் கிடைத்த பலனால் மகிழ்ச்சியில் ஊரே கூடி கூத்தாடி மகிழ்ந்த காலமும் இருந்தது

இதனை சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலமாகிய சங்க சங்கமருவிய காலத்தில் தொல்காப்பியம் கூத்தராற்றுப்படை சிலப்பதிகார அரங்கேற்றுக் கதை முதலியவற்றினூடாக அறியலாம்.

அடுத்து பல்லவர் காலத்தை சேர்ந்த மாணிக்க வாசகர் சிவபெருமானை பின்வருமாறு பாடியமையினூடாகவும் எமது பண்டைச் சமுகத்தில் கூத்துக்கலைஞரின் செல்வாக்கினை அறியமுடிகிறது.



ஆடுகின்றிலை கூத்துடை

யான் கழற்கு அன்பிலை - என்புருகி

பாடுகின்றிலை படைப்பதும் - செய்கிலை

பணிக்கிலை பாதமலர்

சூடுகின்றிலை கூட்டுகின்றதுமிலை - துணையிலை

பிண நெஞ்சே

தெடுகின்றிலை தெருவதோற நிலை

செய்வதொன்று அறியேனே

என்பதனூடாக கூத்து கூத்தன் என்ற சொற்கள் எந்தளவுக்கு பழமை வாய்ந்தது என்பது புலனாகின்றது.

கூத்து செயற்பாடுகள் பரம்பரைபரம்பரையாக எம்முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு எம்மிடையே வழங்குவது. எம்முன் வாழ்ந்த எம் மூதாதையர் எமக்கு காட்டியதும் விட்டுச் சென்றதுமான கலை வடிவமாக இது விளங்குகின்றது. கூத்து ஆவணங்கள் பெரும்பாலும் எழுத்து ஆவணங்களை விட பரம்பரை பரம்பரையாக வந்த வாய்மொழி உபதேசங்கள் ஊடாகவே எமக்கு கிடைத்திருக்கின்றது. கூத்துக்கலையின் அதனை மெருகூட்டும்பொருட்டு மத்தளம் சல்லரி சலங்கையுமே பயன்படுத்தப்பட்டது.

எமது தனித்துவ கலையான கூத்துக்கலையில் எமது முன்னோர்கள் மேலைத்தேய வாத்தியங்களைப் புகுத்த வில்லை இம்மூன்று வாத்தியங்களை மாத்திரம் மாற்றி மாற்றி காட்சிகளுக்கு தகுந்த படி தாளங்களால் மெருகூட்டினர். முன்னோர்கள் கூத்துக்கலையினை தனித்துவ கலையர்களவே வைத்திருக்க விரும்பினார்கள் தமிழ் வளர வேண்டும் தமிழ் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என நினைத்த தமிழர்களின் பாரம்பரியக்கலையான கூத்துக் கலையை , தமிழ் பாரம்பரியத்துடன் வளர்க்க நினைத்தனர்.

அந்த வகையில் கூத்துக்கலைகளை பல வகைகளில் வகைப்படுத்தி இருந்தனர் நாட்டின் அணிகலனாகவும் நாகரீகத்தின் அளவு கோலாகவும் காணப்படும் கூத்துக்கலை பல வகைகளில் காணப்பட்டது. அந்த வகையில் எமது மட்டக்களப்பு பிரதேசத்தில் வடமோடி, தென்மோடி எனும் பிரதான இரு வகையாகவும் இவற்றைவிட விலாசம் எனும் ஒரு வகையாகவும் காணப்படுகின்றது.

விலாசம் என்பது வடமோடி தென்மோடி கலந்த ஒரு புதிய மாற்றங்கள் கொண்டனவாய் இருக்கின்றன. பெரும்பாலும் பயிலப்படும் வடமோடி, தென்மோடி கூத்துக்களிடையே பெரிதும் வேறுபாடுகள் உண்டு இவற்றின் கதைப் போக்கு ஆடல் வகை, இசை மரபு, தாளம், ஆடை அணிகலன்கள், கதைக்கரு என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கவை வட நாட்டில் இருந்து வந்த தமிழரிடம் பரவியதும் பண்டைத் தமிழகத்தில் வழங்கிய ஆரியக் கூத்து வகையைச் சேர்ந்ததுமான கூத்து வடமோடி என்றும் தமிழகத்திற்கு சொந்தமான தென்நாட்டில் நிலவிய கூத்து வகையை சேர்ந்ததுமான கூத்து தென்மோடி என்றும் அழைக்கப்படுகின்றது மட்டக்களப்பில் ஆடப்படும் கூத்துக்களை நாம் நோக்கும் போது வடமோடி, தென்மோடி என இரு பிரிவாக இருந்தாலும் அங்கு மகுடிக்கூத்து, பறைமேளக்கூத்து, வசந்தன் கூத்து போன்ற கூத்துக்களும் ஆடப்படுகின்றன.

பல்கலைக்கழகம் படித்துப்பட்டம் பெற்றவர்கள் கூட கல்வி அறிவில் குறைந்து விளங்கும் அண்ணாவி மார்களைத் தேடி வந்து கற்று செல்வதைக் காண்கின்றோம். உடனடியாக பாட்டுக்களை எழுதி அவர்களாகவே மெட்டுக்களை அமைத்து அதற்கான தாளங்களையும் அமைப்பதில் வல்லவர்களாகவும் பல அண்ணாவி மார்கள் சிறந்து விளங்குகிறார்கள் கூத்துக்கலையில் ஆர்வம் காட்டும் கலைஞர்களுக்கு மட்டுமே தமக்கு தெரிந்தவற்றை சொல்லிக் கொடுக்கும் ஆர்வம் இவர்களிடம் உண்டு

2. கூத்துக்கலை ஆய்வாளர்கள் நோக்கும் சவால்கள்

நமது கூத்துக்கலை பல்லாண்டுக்கு மேல் பழமை வாய்ந்தது. என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கூத்துஎன்பது ஈழத் தமிழரின் பாரம்பரியக் கலையாகும்.

ஆன்மீகக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு நல்ல உபதேசம் வழங்கும் கலையாக விளங்கியது. இந்தக் கருத்துக்களை மக்கள் ஏற்று நம்பிக்கை கொண்டு அதன் மூலம் நல்ல உபதேசங்களைப் பெற்று வாழ்க்கையில் அன்பு பாசம் இரக்கம் உண்மை நேர்மை என்னும் மனித நேயப்பண்புகளை கடைப்பிடித்து மனித நேயம் மிக்கவர்களாக வாழ்ந்தார்கள்.இவ்வாறு சமுதாயத்தை மாற்றி நல்வழிப்படுத்திய இக்கூத்துக்கள் மக்கள் மத்தியிலிருந்து மறைந்து அழியும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. ஆங்கிலேயர் வருகையும் மத்திய தரவர்க்கமும் உருவாக்கமும்.
2. மேலைத்தேய நாகரீக மோகம்.
3. அறிவியல் மறுமலர்ச்சி
4. மேலைத்தேய கலைகளில் ஈடுபாடு காட்டியமை
5. சினிமாவின் தாக்கம்.
6. தொலைக்காட்சி
7. கூத்துக்களை வளர்த்த கிராமங்கள் நகரமயமாக்கப்பட்டதால் கூத்தை வளர்ப்பதில் பேரார்வம் குன்றியமை
8. மேலை நாட்டவர் கூத்துக் கலையில் பேரார்வம் காட்டாமை
9. அரச ஆதரவு இன்மை
10. மக்கள் ஆர்வம் இன்மை
11. படிக்காதவர்கள் முன்வராமை
12. போதிய நிதி உதவியின்மை
13. நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களும் கலைஞர்களின் இடப்பெயர்வும்.
14. காலப் பொக்கிசங்கள் பாதுகாப்பின்றி அழிந்து போனமை
15. நகரங்களில் கூத்துக்கள் முழுமையான கூத்துக்களாக இல்லாமல் நவீன நாடக அம்சங்களாக அறிக்கை செய்யப்பட்டமை
16. இளந் தலைமுறையினரின் தொடர்ச்சியான கல்வி நாட்டம் போர்ச்சூழல் தொடர் உழைப்பு என்பன கலையினைப் பேணும் நாட்டத்தை குறைத்தமை

3. கிண்ணையடி கிராமமும் நாட்டுக் கூத்துக் கலையும்.

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்ட வாழைச்சேனை பிரதேசத்திலே கிண்ணையடி கிராமம் காணப்படுகிறது. இயற்கை வளம் பொருந்திய இக் கிராமம் கிண்ணைமரச் சோலை அதிகமாக காணப்பட்ட மணல் பிரதேசமாகையால் கிண்ணையடி எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றது. இயற்கை வளம் கொட்டிக் கிடக்கும் இக்கிராமத்திலே பசுமையான வயல்கள் குளிர்ச்சியான ஆறு பழமுதிர்ச் சோலை என்று அழைக்கப்படும் அளவிற்கு காணி வகை விவசாயத் தொழில் வாய்ப்பு மீன் பிடி எனப் பலவற்றை காணலாம்.

கவலையுடன் வருவோர் களைப்பாறிச் செல்லவும் பசியுடன் வருவோர் பசி போக்கவும் துணைபுரியும் எம் கிண்ணையடித் தமிழ் கிராமம் . இதன் வடக்கே மீறாவோடைக்கிராமமும் கிழக்கே சுங்காங்கேணிக்கிராமமும் தெற்கே வில்லுக்குளமும் நெற்செய்கைக்காணியும் மேற்கே நெற் செய்கைக் காணியும் வாவியும் இவ்வூரின் எல்லைகளாக காணப்படுகின்றன.

கிண்ணையடிக் கிராமத்தின் தோற்றமானது 1900 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். அக்காலப்பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக மிறாவோடைப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறி மேடான இடமொன்றை தேடி இடம் பெயர்ந்த போது மிறாவோடைக்கு தெற்கேயுள்ள ஆற்றைப் அண்டிய மேடான கிண்ணைமரச் சேலையைக் கண்டு, அதில் அவர்கள் தற்காலிமாக வாழத் தொடங்கினார். அதனை அடுத்து கிண்ணையடிக் கிராமத்தின் அயல் கிராமங்களான கிரான், சந்திவெளி, சித்தாண்டி போன்ற பகுதிகளில் இருந்து மக்கள் இங்கு வந்து குடியேறினர். அத்தோடு விவசாயம் மீன்பிடி தொழில்களில் நிமித்தம் மாங்காடு செட்டிபாளையம் குருக்கள் மடம், தேத்தாத்தீவு, முனைக்காடு போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு குடியேறினர். இவ்வாறு குடியேறிய அனைவரும் திருமண பந்தம் காரணமாக இங்கேயே நிரந்தரமாக வாழத் தொடங்கி விட்டனர். அக்காலத்தில் சுமார் 90 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்ததாக அறிய முடிகின்றது.

தற்போதுகிண்ணையடிக் கிராம விஸ்தீரணம் 2.5 சதுர கிலோமீற்றர் ஆகும் இக்கிராமத்திலே 717 குடும்பங்களை சேர்ந்த சுமார் 2500கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இன்று 202 எனும் கிராமசேவகர் பிரிவின் கீழ் இருக்கும் கிண்ணையடிக் கிராமத்தில் பல ஆலயங்கள் சங்கங்கள் என்பன காணப்படுகின்றன.

குறிப்பாக கிராம அபிவிருத்திச் சங்கம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கம், மீனவர் சங்கம் மகளீர் சங்கம் விளையாட்டுக் கழகம், அறிவொளி சிறுவர் கழகம் ஹம்சத்வனி கலைக்குழு என்பவற்றைக் குறிப்பிடலாம். மற்றும் பக்திக்கும் கலைக்கும் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கும் பெயர்போன கிண்ணையடிக்கிராமத்திலே பிள்ளையார், விஸ்ணு, முருகன், நாகதம்பிரான், நரசிங்கன், சிவன், மாரியம்மன். போன்ற தெய்வங்களுக்கான ஆலயங்களும் அமைந்து காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

கிண்ணையடிக்கிராமத்தை சேர்ந்த அநேகமானவர்கள் விவசாயிகளாகவே காணப்படுகின்றனர் காரணம் அதிக போடிமார் பரம்பரை வாழ்ந்த மண் கிண்ணையடியாகும். கல்வி வளர்ச்சியினை எடுத்துக் கொண்டால் கிண்ணையடிக்கிராமம் இன்று முன்னிலை வகிக்கின்றது என்பதில் ஐயமில்லை . அதிகமான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமையும் கிண்ணையடிக்கிராமத்திற்கு உண்டு. பல பட்டதாரிகள் பல்கலைக்கழக மாணவர்கள் திறமை மிக்க பாடசாலை மாணவர்களை கொண்டுள்ளமை கிண்ணையடிக்கிராமத்தின் வெற்றியும் பலமும் என்று சொல்லலாம்.

மட்டக்களப்பு மாவட்ட கூத்துப் பரம்பல்

தமிழர் எம்பண்பாட்டு பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கலை வடிவமான கூத்துக்கலையினை வளர்த்துப் பாதுகாத்த கிராமம் எனது கிராமம் என்பதை தலை நிமிர்ந்து மார்பு தட்டி சொல்வதில் பெருமை கொள்கின்றேன். மட்டக்களப்பு கூத்துக்கலையில் முன்னணி வகிக்கும் கிராமங்களில் கிண்ணையடிக்கிராமமும் முக்கியமானதாகும்.

எனது கிராமத்திற் கூத்துக்கலையினை அறிமுகப்படுத்தி அரங்கேற்றிய பெருமை திரு. பெரியதம்பி செல்லையா, திரு. பெரியதம்பி கணபதிப்பிள்ளை ஆகியோரைச் சேரும். இவ்விரு சகோதரர்களுமே கிண்ணையடிக்கிராமத்தில் கூத்துக்கலையினை கொண்டு சேர்த்து நிலை நாட்டிய அண்ணாவிமார்கள் ஆவார். 1930 களுக்கு முன்னர் கிண்ணையடி கிராமத்தின் கூத்து பாரம்பரியம் காணப்பட்டதாகவும் முதலாவது கூத்தாக அரிச்சந்திர நாடகம் அரங்கேற்றப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

கூத்துக் கலையின் மரபுகளையும் சம்பிரதாயங்களையும் அறிந்து அதனைக் கிண்ணையடி யில் நிலை நாட்டிய அண்ணாவி மாருக்கு அளவில்லை . அதில் அதிகமானோர் இறைவனடி சேர்ந்து விட்டனர். அவர்களுள் திரு. பெரியதம்பி செல்லையா, திரு. பெரியதம்பி கணபதிப்பிள்ளை திரு. சுப்பிரமணியம் விதானையார், திரு சின்னமணி வேலாயுதம், திரு மணியன் பொன்னுத்துரை போன்றோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இன்று திரு குமாரியன்கந்தையா, திரு. சு சௌந்தர்ராஜா போன்ற சிலரே கூத்துக் கலையினை வளர்த்து வருகின்றனர்.

மற்றும் கிண்ணையடிக்கிராமத்தில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற கூத்துக் கலைஞர்களுக்கே அளவில்லை நானும் கூத்துக் கலைஞர்களின் குடும்பத்தை சேர்ந்தவன் என்பதில் பெருமை கொள்கின்றேன். எனது தந்தை பல கூத்துக்களில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார்என்பதில் மிகவும் மகிழ்வாயுள்ளது.

1966-1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிண்ணையடிக்கிராமத்தில் கதிர்ஒளி மன்றம் எனும் கலை அமைப்பு அமைக்கப்பட்டு கூத்துக்கலை நாடகக் கலை என்பன இக்கிராமங்களிலும் வெளிக்கிராமங்களிலும் அரங்கேற்றப்பட்டன என்பது அறியக்கூடியதாக இருந்தது. மற்றும் இங்கு வாழ்ந்த மூத்த கலைஞர்கள் கூத்துக் கலையின் மீது கொண்டிருந்த ஆர்வம் காரணமாக கூத்துக்களை இயக்கவும், பாடவும் ஆடவும் கூத்துக்குரிய வாத்தியங்களான மத்தளம், உடுக்கு, பறை என்பவற்றை தயாரிக்கவும், அதனைப்பயன்படுத்தவும் கூத்துக்கலைஞர்களுக்கான ஆடைகள் அலங்காரப் பொருட்கள் உபகரணங்களான வில் அம்பு காவடி வாகனங்கள் என்பவற்றை அமைப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

இக்கூத்துக்கலை வல்லுனர்கள் பல காரணங்களுக்காக கூத்துக்கலையினை அரங்கேற்றினார்கள். குறிப்பாக நோய்த்தீரவும், பஞ்சம் வருமை நீங்கும், கிராமம் செழிக்கும் மழை பெய்யும், தொற்று நோய்கள் குறையும் என்ற ஐதீகம் மக்களிடம் காணப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனை அவர்கள் ஒரு தெய்வீகக் கலையாகவே பார்த்தார்கள். இங்கு கிழமைக் கூத்து வருடக் கூத்து, மற்றும் திருவிழா கூத்து என அடிக்கடி கூத்துக் கலையினை நிகழ்த்தி வருகின்றனர் குறிப்பாக கிண்ணையடியில் தென்மோடி வடமோடிக் கூத்துக்கலைக்கு ஆடப்படல்; மகிடிக் கூத்து புலிக்கூத்து வசந்தன் கூத்து என்பனவும் அரங்கேற்றப்பட்டன. ஆரம்ப காலத்தில் இராவண சமங்காரம் பதினான்காம் போர் பதினெட்டாம் போர் கீசகன் சங்காரம். அரிச்சந்திர நாடகம், மணிமாலன் சண்டை, கஞ்சன் போர், துரோபதை துயில் உரிதல் சத்தியவான் சாவித்திரி போன்ற பல கதைகளைக் கொண்டு கூத்தினை வளர்த்துள்ளனர்.

கிண்ணையடிக்கிராமத்தில் தற்போது வாழ்ந்து வருகின்ற திரு. கு. கந்தையா அண்ணாவியார்கூத்துக்கலைகள் தொடர்பாக பல பணி புரிந்துள்ளார். 1965 தொடக்கம் இற்றை வரை அவரது பணி தொடர்கின்றமை சிறப்பம்சமாகும் இதுவரை காலமும் இவரால் அரங்கேற்றப்பட்ட கூத்துக்கலைகள் கிண்ணையடி கூத்து பாரம்பரியத்தைப் புலப்படுத்தும்.

1965ம் ஆண்டு சைந்தவன் நாடகம்
1968 இராம நாடகம் (வடமோடி)
1969 பரிமழகாசன் நாடகம் (தென்மோடி)
1974 ஆம் ஆண்டு கண்டியரசன் நாடகம் (தென்மோடி)
1980 ஏலகன்னி நாடகம் (வடமோடி)
1990 கண்ணகி கலியாணம் (வடமோடி)
1992 ஆஞ்சிநேயர் யுத்தம் பதினெட்டாம் போர் (வடமோடி)
2012 வள்ளியம்மன் நாடகம் (வடமோடி)

4. மந்தமாகியமைக்கான காரணங்கள்..

இலங்கைத் தமிழார் எம்மால் பயிலப்பட்டு வரும் பாரம்பரியக் கலைவடிவமான கூத்துக்கலை வடிவம் கிண்ணையடிக்கிராமத்தில் சிறப்பாக வளர்க்கப்பட்டு வந்தாலுங்கூட 1992ற்குப் பிறகு அது மந்த நிலையினை அடைய ஆரம்பித்தது. அதனையடுத்து கூத்து முயற்சிகள் 20 வருடங்களுக்குப்பின்னரே ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக 2012 ஆண்டு கிண்ணையடிக் கிராமத்தின் கூத்துக்கலைக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. இது மந்த நிலையை அடைய எமது நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமே காரணம் பாரிய தாக்கத்தினை செலுத்தின. குறிப்பாக இலங்கையின் கிழக்குப்பிரதேசங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு பழைமை மிகுந்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தாம்வாழ்ந்த மண்ணை விட்டு இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர் மாலை ஆகி விட்டதால் வெளியில் நடமாட முடியாத நிலையையும் நிச்சயமற்ற வாழ்க்கையையும் வாழ்ந்த கிண்ணையடிக்கிராம மக்கள் கூத்துக்கலையில் ஈடுபட முன்வரவில்லை.

கிண்ணையடிக்கிராமத்தை சேர்ந்த இளைஞர் யுவதியர் சுதந்திரமாக எதிலும் ஈடுபடாத நிலை காணப்பட்டது. வயது முதிர்ந்தவர்களே அதிகமாக காணப்பட்டனர். ஏனையவர்கள் வெளி இடங்களில் வசித்தனர். இதனாலேயே இந்த இடைவெளி அதிகரித்தது எனலாம். இந்த இடைவெளி கூத்துக் கலைஞர்களின் ஆர்வத்தைக் குறைத்ததோடு புதிய தலைமுறையினர் அதில் ஈடுபடுவதில் அக்கறை இன்றி இருந்தனர்.

5. 2012ம் ஆண்டு கூத்துக்கலை மீள் உருவாக்கம்.

தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களால் கிண்ணையடியில் கூத்துக் கலை தேக்கமடைந்திருந்தது. இதனைத் தொடர யாரும் முன்வராத சந்தர்ப்பத்தில் திருமதி கஜேந்தினி உதயகுமார் அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. இவர் ஹம்சத் வணி கலைக்குழுவினரைக் கொண்டு இதனை மேற்கொண்டனர். இது தொடர்பாக அவர் கூறியது.எந்தவொரு மனிதனும் தான் எங்கு சென்றாலும் தனது ஊரையும் பண்பாட்டு கலாசாரத்தையும் இழிவுபடுத்துவனவாக அன்றி நேசிப்பவனாகவே காணப்படுகின்றான். அந்த வகையில் தமிழரின் பாரம்பரிய கலையான கூத்து கலையினை முன்னெடுக்க முன்வந்தேன் எனது சிறு வயதில் கிரகித்து செவி மடுக்கும் தன்மையின்றி கட்புலன் மட்டும் வரக்கூடிய பருவத்திலே கூத்துக்கலையினை கண்டுகளித்தேன் இதனையடுத்து பல்கலைக்கழகத்திலே மூத்த கலையினைக் காண சந்தர்ப்பம் கிடைத்தது. ஹம்சத்வணி கலைக் குழு மூலம் பல கலை நிகழ்வுகளை செய்து வரும் நான் கலையில் மிகுந்த ஆர்வம் காட்டி வருவது வழமை

திறமையான அண்ணாவி மார்களையும் கலைஞர்களையும் கொண்டுள்ள எனது கிராமத்தில் ஏன் கூத்துக்கலையினை தொடரக்கூடாது என்ற வினா என்னுள் வந்தது. கூத்துக்கலைக்கு போனால் கிராமம் கிண்ணையடி என்று சொல்வார்கள் எனவே எமது மூதாதையர் கைவசம் இருந்த கலையை அழித்து விடக்கூடாது என்ற நிலையில் அண்ணாவியரை அணுகினேன். இங்கு முக்கியமாக குறிப்பிட்டு சொல்லக்கூடியது இங்குள்ள அண்ணாவி மார்கள் எல்லோருமே வயதானவர்கள். அவர்களின் காலத்திற்குப்பின்னர் கூத்துக்கலை என்றால் என்ன? என்று கேட்கும் நிலைக்கு எமது சமூகம் வரலாம் இந்த அவல நிலை நீக்கப்பட வேண்டும் என முடிவு செய்தேன்.

அண்ணாவியருடன் தொடர்பு கொண்ட போது அவர் கூத்து கலையினை முன்னெடுப்பதில் ஆர்வமாக இருந்தார். அவர் என்னிடம் சொன்னது. இதனை முன்னெடுக்க கலைஞர்கள் இல்லையே என்பதாகும். கலைஞர்களை நான் ஒன்று சேர்ந்து அண்ணாவியாரின் உதவியுடன் 2012ம் ஆண்டு கூத்துக்கலையினை அரங்கேற்றினோம். பாரிய சவால்களுக்கு மத்தியில் அரங்கேற்றப்பட்டாலும். இறுதியிலும் பல பாராட்டுக்களும் வரவேற்புகளும் கிடைத்தன. இதுவே எங்களுக்கு கிடைத்த வெற்றியும் அந்தஸ்துமாகும்.

கூத்துக்கலை என்றால் என்ன என்றே அறியாத சிறுவர்களே இதில் பங்கு பற்றியதோடு ஒரு புதிய விடயமாக அதிகமான பெண் பிள்ளைகள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. இதில் த.லக்சாயினி, ச.கிந்துஜா, ப.தினேஜா, ம.புவிதரிஷா, சி.அருள்யேந்தினி, செ.நிரோஜினி, அ.வேணுஜா, பா.ரமேஸ்குமார், கு.புவிகாந், ப.லோஜிதன், ம.ஜீவராஜ், கு.ஜனார்த்தனன்.

6. மகிடிக் கூத்தும் கிண்ணையடியும்.

இவற்றைத்தவிர மகிடிக்கூத்துக்கலையும் கிண்ணையடிக்கிராமத்தில் சில வருடங்களாக தொடர்ந்து கிண்ணையடி விஷ்ணு ஆலய முன்றலில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. மகிடி என்ற சொல்லுக்கு மந்திர தந்திரங்களைக் காட்டும் விளையாட்டு எனப் பொருள் கொள்வர். காரணம் இக்கலையில் மந்திர தந்திர விளையாட்டுக்கள் அதிகமாக காணப்படுவதும் நகைச்சுவைப் பாங்காகும்இக்கலையும் திரு.கு. கந்தையா அண்ணாவியார் தலைமையிலேயே நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கலையில் ஈடுபடுவர் மக்களை மகிழ்விப்பதில் குறியாக இருப்பர். இது பகல் வேளையில் திறந்த வெளியில் என கிராமத்தில் இடம்பெறும் கதை வசனங்கள் இன்றி சைகை ஒலி மூலமே தமது கருத்தை வெளிப்படுத்துவார்கள் இக்கலையினை நேரடியாக கண்டு களிக்கும் சந்தர்ப்பம்எனக்கு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. அதிகமான மக்கள் பார்வையிட வருவார்கள் கூத்துக்கலை பற்றிய விடயத்தில் கிண்ணையடிக்கிராமத்தவர் காட்டும் ஆர்வம் அளப்பெரியதுஎன்றே கூற வேண்டும். அதில் நானும் ஒருவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கின்றேன்

7. முடிவுரை

எனவே இவற்றை வைத்துப்பார்க்கும். போது கோறளைப்பற்று பிரதேசத்தின் கூத்துக்கலை பாரம்பரியங்களை வளர்த்து வரும் கிராமங்களுள் கிண்ணையடி கிராமம் முன்னிலை வகிக்கின்றது என்பது புலனாகின்றது. இக்கிராம மக்கள் நவீனத்துவம் அடைந்திருந்தாலும். கூட என் மூதாதையர் விட்டுச் சென்ற பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாக்கவும் பின்னிக்கவில்லை. இதனாலேயே கூத்துக்கலை கூட இன்றும் பயிலப்பட்டு வருகின்றது. 2013. 08.08 ம் திகதியன்றும் கிண்ணையடி நாக தம்பிரான் ஆலயத்தில் கூத்துக்கலை அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று 2013.10.04ம் திகதி கோறளைப்பற்று பிரதேசசெயலகத்தின் ஆதி வலம்புரி விநாயக ஆலய முன்றலில் அரங்கேற்றம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இளஞ்சைவப்புலவர் திரு. கனகரெத்தினம் சிவதர்சன்
தலைவர் ஸ்ரீசக்தி கலைக்குழு, கிண்ணையடி

வாழ்த்துப்பெறும் கலைஞர்கள்



பெயர் : திரு.விநாயகம் - இரத்தினசிங்கம்

பி.திகதி : 1948.06.02

பிறப்பிடம் : யூனியன் கொலனி, வாழைச்சேனை

கௌரவிக்கப்படும் துறை : நாடகம்

நாடகத்துறையில் ஆர்வம் கொண்ட இவர் கண்ணகிபுரம், R.K. கோமாளிகள் நாடக குழுவில் நீண்ட கால அங்கத்துவம் கொண்டவர் என்பது கோறளைப்பற்று பிரதேச நாடக கலை வளர்ச்சியில் 1966.04.14 ம் திகதி முதல் நாடகத்துறையில் இவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இதன் படி கணக்குப்பிள்ளையின் காதலி. பாதாளவைரவி, முகத்தில் முழியாத கூப்பன் ஈடு, சமநீதி, உலக்கைப்பரிசாரி, ஐம்பதிலும் ஆசை வரும், அரிவாள் ஆறுமுகம், திருடாதே பாப்பா திருடாதே, நின்டுக்க வாறன், மருந்து போட்ட மாப்பிள்ளை, மந்திரவாதி, அவசரக்கல்யாணம், ஹலோ மிஸ்டர், ஜெமிந்தார், அடங்காப்பிடாரி , சொல்லாமல் போனவன்,பாதை மாறிய பெண், வழுக்கி விழுந்த மாப்பிள்ளை,சூறாவளி மாப்பிள்ளை, பைத்தியத்திற்கு வைத்தியம் மாமி போட்ட மருந்து, வெற்றிக்கு பரிசு கைவிளங்கு, போன்ற நகைச்சுவை நாடகங்களையும் சமூக விழிப்புனர்வு நாடகங்கலால் கதை வசனம், நடிப்பு போன்றவற்றில் பங்களிப்பு செய்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெயர்: திரு.முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை

பி.திகதி : 1945.04.13

பிறப்பிடம் : சித்தாண்டி

வசிப்பிடம் : பட்டியடிச்சேனை.

கௌரவிக்கப்படும் துறை : வைத்தியம்.

கல்குடாவில் வசித்த விஷவைத்தியர், திரு.தாமோதரம்பிள்ளை, என்பவரிடம் முறையாக விஷ வைத்தியம் கற்று சுமார் 35 வருடங்களுக்கு மேலாக ஆயிரத்துக்கு மேலான விஷக்கடியினால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சைகள் வழங்கினார்.

கோறளைப்பற்று பிரதேச கலாமன்ற விபரம்

ஹம் சத்வணி கலைக்குழு	- கிண்ணையடி
அண்ணா கலைமன்றம்	- கறுவாக்கேணி
பெரியார் கலைமன்றம்	- பேத்தாழை
கலைவாணி கலாமன்றம்	- புதுக்குடியிருப்பு
பாரதி கலை இலக்கிய மேம்பாட்டுக்கழகம்	-புதுகுடியிருப்பு
கண்ணகி கலாமன்றம்	- கல்மடு
வாழைச்சேனை தமிழ் சங்கம்	
நர்த்தன இசை நடனகலா நிலையம்	- வாழைச்சேனை

கோரளைப்பற்று பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள்

இளம் பரிதி. வண்ணாத்துப்பூச்சிகள் நூல்களின் வெளியீடும் பாரம்பரிய பொருள் கண்காட்சி -2013

கிராம அபிவிருத்திச்சங்கங்களின் உற்பத்திக்கண்காட்சியும் விற்பனையும் -2013

செல்வி.ஸ்கொலஸ்டகா அமலினி நந்தகுமார்
கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்.
கோறளைப்பற்று,வாழைச்சேனை.

நன்றிகள் இவர்களுக்கு

ஓர் நிர்வனம் வெற்றியடைய வேண்டும் எனின் அதனை தலைமைத்துவம் அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒத்துழைப்பினை பெற்று அதன் ஊடாக நிருவனத்தின் குறிக்கோலினை நோக்கினை விரைவாக அடையச்செய்ய முடியும். இவ் வகையில் எமது பிரதேச செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒவ்வொரு பிரிவுகளும் தமது முழுமையான ஒத்துழைப்பினை அவருக்கு வழங்கி வருவது குறிப்பிடதக்கது.

இவ் வகையில் சிறந்த தலைமையினை வழங்கி வரும் பிரதேச செயலாளர் திருமதி.தெட்சணகௌரி தினேஷ் அவர்களுக்கும் உதவித்திட்டப்பணிப்பாளர் பிரணவசோதி அவர்கட்கும் பிரதித்திட்டப்பணிப்பாளர் திரு.எஸ் பிரபாகரன் அவர்கட்கும் நிர்வாக உத்தியோகத்தர் ஜனாப் எஸ்.ரஹீம் அவர்கட்கும் கணக்காளர் அவர்கட்கும் எனது முதற்கன் நன்றியைத்தெரிவித்தக்கொள்கின்றேன்.

அறிஞர் ஜார்ஜ்ஹெரபெட்டின் கருத்துப்படி மூன்று மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு வாழ்ந்து வந்தால் அவர்கள் ஆறு மனிதர்கள் சுமக்கக்கூடிய சுமையை இலகுவாக சுமக்க முடியும்" எனும் கருத்துப்படி பேரவையின் வெற்றிக்கு உறுதுணையாகக் காணப்பட்ட E.சீதாராமண், M.ஸ்ரீதரன், S.ரவிச்சந்திரன், K.இந்திரகுமார், AP.ஆஷா, J.ஜேசுமிதா, T.பவாணி, JAA.ஜெவாத், V.விமலஸ்ரீ, MBF.பர்சானா, T.கிஷாந்தினி, S.சசிமலர், S.மகேந்திரா, S.ரேணுகா, V.ஜனகன், M.M.ஜெளபர், S.நிலக்ஷிகா, மு.மாதுளகுமார், T,சங்கரலிங்கம், K.சுப்பையா, SMM.முர்ஷிட், MACM ருமைஷ், V.விஜயலக்ஷ்மி, Y.ஜெயக்குமார், A.குகன், A.வினுராஜ், KSR சிவகுமார், A.நஜீம், ABM.பைஷல், SA.பைரூஸ், Y.பிரவீனா, K.நவநிதனி, R.விஜயமாலினி, M.தினேஜ், SMA நஜீப், K.சங்கீதா, M.ஜீவனந்தா, M.குணபாலன், S.குமாரவேல், K.கஜேந்திரராஜ், S.அரியகுட்டி, S.வரதராஜன், K.ஜெகதீஸ்வரன், J.லோபராஜ், K.கிருஸ்ணகாந்தன், K.டிவாஸ்கர், T.பாஸ்கரன், G.நற்குகனேஸ்வரன், Y.அருளானந்தன்,R.பிரேமகாந்தன், T.அரியநாயகம், S.தயபரன், K.சந்திரமோகன்,S.சுதாகரன், P.குலசிங்கம், L.லேகராஜன், S.சுரேஸ்குமார், J.சிவலிங்கம், T.குனசேகரம்,J.லோகநாதன், S.சக்திதாசன், K.சுரேந்திரன்,K.விமலநாதன், K.இதயராஜ், N.ஜெயகாந்தன்,R.ரவி, K.அற்புதநாதன்,S.யோகராசா, B.சுபாகரன்,R.விக்னேஸ்வரன், P.மணிவானன், M.AM முகமட், K.தட்சாயினி, T.உசாநந்தினி, K.விஜயக்கண்ணன், K.சாந்தகுமாரி, E,கலைச்செல்வி, S.யோகராஜன், K.ஸ்ரீதரன், P.யோசப் ஜெபநேசன், M.மனோஜினி, C.அனித்தா, K.இந்திராணி, S.ரதிக்கா,S.விஜித்தா, P.ஜெகதா, அ.கிஷாந்தன், R.ரஜிதா, A.அரசிலங்குமாரி, S.பாத்தீபன், K.சுகிதன், S.கோமலன், P. சசிகரன், S.சுதர்ஷன், S.ரேவதன், பனடிக் மோஷஸ், P.பிரதீபா,K.சுதர்ஜினி, A.விஜிதா, A.அழகுராஜ், N.நகுல்ராஜ், N.பிரதீபன், K.சந்திரகாந்தன், T.சுதாராஜ், Yபிரியா, J.M ரொபின், K.வகீஸ்வரி, ஏஞ்சல் ஜெனிபர்,M.சுரேஸ்குமார், K.ஜானிசம், C.டிலாஜினி. H.சர்மிளா, AM.ரியாஸ்,M.T அப்துள் ரஹிம், K.ரிஜிதா, K.கவிதா, S.தர்மிளா, K.கஜேந்தினி, S.ஜயந்தி, S.நிலோஜினி, K. சுதன், S.சர்மிளா, T.கலிஸ்டா, K. விக்டோரியா, P.சசிகலா, மலரவன், S.பிரியசுந்தரி, K.தயாபரன், N.ஜனநாதன், N.சுகிர்தமணி, K.பவளகாந்தினி, T.துஷாந்தினி, R,விஜிதா ஆகியோருக்கு நிதி உதவி வழங்கிய ESCO, பிரதேசசபை, மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கி, தங்கமஹால் ஜுவலரி உரிமையாளர் ஆர்.மணி மற்றும் நிதிவழங்கிய பொதுமக்களுக்கும் எமது நன்றிகள்.

BOC
3G SAVINGS
செலவிலும் சேமிப்பு – அன்பார்ந்தவர்களின் நாளை

இலங்கையில் முதன் முறையாக
வங்கி வரலாற்றில் புதிய அனுபவம்

நீங்கள் BOC டெபிட் அட்டையில் செலவழிக்கும் போது
அந்த செலவு உங்களுக்கு சேமிப்பாதமென்றால்...
அந்த சேமிப்பு உங்களின் அன்பார்ந்தவர்களின் எதிர்கால
சேமிப்பு நலனுக்காக

உங்களின் பெற்றோர்களுக்காக BOC சிரேஷ்ட பிரஜைகளின் கணக்கில், குழந்தைகளுக்காக BOC ரண்கெகுளு கணக்கில் அல்லது நீங்கள் விரும்பும் எந்தவொரு BOC சேமிப்பு கணக்கில் செலவோடு சேமிப்பையும் செய்யுங்கள்

பட்டியல் செலுத்தும் தருவாயில் ரூபா 100 முதல் 1000 வரை வரும் பணத்திற்கு உங்களின் விருப்பத்திற்கேற்ப உரிய கணக்கில் வைப்பு செய்யலாம்

மேலதிக விபரங்கள் அருகில் உள்ள இலங்கை வங்கி கிளையில்

நீங்களும் இன்றே BOC 3G SAVINGS சேமிப்புக்காக பதிவு செய்யுங்கள்

மேலதிக விபரங்கள்
அருகில் இருக்கும் இலங்கை
வங்கி கிளையில்
அழையுங்கள் : 011 220 4444

www.boc.lk
Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

சீட்டு ஒன்று
2 வட்டியுடன் காப்புறுதியும்

சீட்டிற்கு பணம் போடுவதாக நினைத்து ஒவ்வொரு மாதமும்
ரன் உல்பதவிற்கு காசு போடுங்கள்

சாதாரண வட்டியை விட 2% அதிக வட்டியும் 10% போனஸ்
வட்டியும் 5 இடைம் வரை ஆயுட் காப்புறுதியும்
இம் மூன்றையும் பெற்றுக்கொள்ளுங்கள்

ரு 500/- வைப்பிலிட்டு ரன் உல்பத கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.
ரன் உல்பத கணக்கிலுள்ள அதிக அதிகமாக முதலிடும்
உங்களுக்கு பிரதிபலன்களும் அதிகம்.

10 % போனஸ் வட்டிக்கான பணத்தை மீளப்பெ
3 மாதங்கள் நிறைவடைந்து இருத்தல் வேண்டும் அத்துடன்
மாதத்திற்கு குறைந்தபட்சம் ரு 100/- வைப்பிலிடவேண்டும்.

BOC
ரன் உல்பத
வட்டியை பெருக்கும் காசு கணக்கு

*நிபந்தனைகளுக்குட்பட்டது

www.boc.lk
அழைப்பு நிலையம்: (+94) 011 220 4444
Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்



குழந்தைகளுக்கு நிறைவான கல்வியை ஊட்டி ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதுதான் ஒவ்வொரு தாயினதும் தந்தையினதும் எதிர்பார்ப்பாகும். சேமிப்பும் அதே போன்றதுதான். கல்வியைப் போன்று சேமிப்பும் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் முக்கியமான ஒன்று.

உங்கள் குழந்தைக்காக HNB சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

புதிதாக பிறக்கும் உங்கள் பிள்ளைக்கு 12 வயதாகும் வரை HNB சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.

குழந்தைக்கு கிடைக்கும் பயன் என்ன?

அதிக நன்மைகள் கிடைக்கும்

கணக்கு மீதி	பரிசு
ரூபா 1,000/-	சிங்கிதி ஐம்போ உண்டியல்
ரூபா 5,000/-	தண்ணீர் போத்தல்
ரூபா 10,000/-	பாடசாலை புத்தகப்பை
ரூபா 25,000/-	கைக்கடிகாரம்
ரூபா 50,000/-	Mega LIFCO அதிரடி
ரூபா 100,000/-	ரூ.3,000/- பெறுமதியுள்ள பரிசு வவுச்சர்

- கணனி வாங்குவதற்கான கடனுதவி
- பத்தும் விமான சீட்டிழுப்பில் நீங்களும் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.
- 5ஆம் வகுப்பு புலமைப்பரிசிலில் சித்தியடையும் உங்கள் குழந்தைக்கு ரூ. 7 மில்லியன் பெறுமதி வாய்ந்த புலமைப்பரிசில்களை வென்றி பெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

ஆரம்ப வைப்பாகக் குறைந்தபட்சம் ரூ.500/- ஐ வைப்புச் செய்து HNB சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை இன்றே ஆரம்பியுங்கள். இக்கணக்கின் மிகுதியை அதிகரித்து, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னதாகக் குறைந்தபட்ச மீதியாக ரூ.10,000/- ஐப் பேணிவருவதன்மூலம், மேற்கூறிய புலமைப்பரிசில்களுக்குத் தகுதிபெறுங்கள்.

பரிசு	புலமைப்பரிசில்களின் பெறுமதி (ஒன்று)
மாவட்டத்தில் சிறந்த இருபது பேர் ஒவ்வொருவர்	ரூபா 20,000/-
நாடளாவிய ரீதியில் 1ஆம் இடம் வகிப்பவர்	ரூபா 300,000/-
நாடளாவிய ரீதியில் 2ஆம் இடம் வகிப்பவர்	ரூபா 200,000/-
நாடளாவிய ரீதியில் 3ஆம் இடம் வகிப்பவர்	ரூபா 100,000/-

நிபந்தனைகளுக்குட்பட்டது

HNB சிங்கிதி சிறுவர்

இன்றே உங்கள் குழந்தைக்கு HNB சிங்கிதி சிறுவர் கணக்கை ஆரம்பியுங்கள்.

கல்வியை தொடர்வோம் - சேமிப்பையும் தொடர்வோம்

உச் நிறுவன் : AA-(lka)

HNB தலைமை அலுவலகம், HNB டவர்ஸ், 479, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி. : 2651983 மின்னஞ்சல்: hnb@hnb.lk இணையத்தளம்: www.hnb.lk

வெளிநாட்டிலிருந்து மணிக்கிராம் சேவை ஊடாக அனுப்பும் பணத்தை கொமர்ஷல் வங்கியில் பெற்றுக் கொள்ளும் உங்களுக்கு ஹோம் தியேட்டர் சிஸ்டம், LED TV, வோட்டர் பில்டர், மைக்ரோவேவ் அவண், கிறைண்டர், டோஸ்டர் உட்பட மேலும் பல பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லும் வாய்ப்பு காத்திருக்கிறது. நீங்களும் மணிக்கிராம் ஊடாக பணத்தை அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் பெற்று, சீட்டிழுப்பில் கலந்து கொண்டு வெற்றியாளராகுங்கள்.

செப்டம்பர் 01 முதல் டிசம்பர் 31 வரை மாதாந்தம் பரிசுகள்.

MoneyGram.
money transfer

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

+94 114 932 444 / +94 112 353 578

2013 ஒக்டோபர் 01 முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை ரூ. 2500/- பணவைப்புச் செய்யும் உங்களுக்கு

கிட்ஸ் லேர்னிங் லெப்டொப்

புதிதாக ஆரம்பிக்கும் அல்லது ஏற்கனவேயுள்ள **'இசுறு உதான'** கணக்கில் ரூ. 2,500/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்து பெறுமதியான Kids learning Laptop

500 இனை வெல்லுங்கள்

மக்கள் வங்கி

டெலஸ்கோப்

புதிதாக ஆரம்பிக்கும் அல்லது ஏற்கனவேயுள்ள **'சிசு உதான'** கணக்கில் ரூ. 2,500/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்து பெறுமதியான Telescope

1000 இனை வெல்லுங்கள்

சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினர்

நிபந்தனைகள் உண்டு

2013 ஒக்டோபர் 01 முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை வைப்புச் செய்யும் ஒவ்வொரு ரூ. 2,500/- இற்கும் ஒவ்வொரு வெற்றி வாய்ப்பு கிட்டும். இக்காலப்பகுதியில் ரூ. 2,500/- இனை பகுதி பகுதியாகவும் வைப்புச் செய்ய முடியும்.

சிறந்த எதிர்காலத்திற்கு பயனதரும் பரிசுகளை வென்றிட, நீங்களும் இன்றே மக்கள் வங்கிக்கு வாருங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2481677 / 011 2481682

AA- Brand Fitch Rating, AA- High Rating

மக்கள் வங்கி

தரம் குன்றாத அழகிய பவுன்
தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

தங்கமஹால் ஜுவலரி

பிரதான வீதி, வாழைச்சேனை

நம்பிக்கை
நாணயம்
நேர்மை

உரிமையாளர்: ஆர்.மணி

வாழைச்சேனை பிரதேச செயலாளர்கள்

01.01.1993 தொடக்கம் இன்று வரை

திருமதி T.தினேஷ்
21.03.2012 -

திரு.K.மகேசன்
01.01.1993 - 31.07.1993

திரு.S.கிரிதரன்
07.04.2009 - 20.03.2012

திரு.S.பாலசுப்பிரமணியம்
01.08.1993 - 15.08.1995

திரு.K.கருணாகரன்
18.06.2007-06.04.2009

திரு.K.கதிர்காமநாதன்
16.08.1995 - 31.12.1999

திருமதி.K. பத்மராஜா
01.06.2003 - 17.06.2007

திரு.C.புண்ணியமூர்த்தி
01.01.2000 - 31.05.2003

மடோனா அச்சகம், செங்கலடி - 0652054010 / 0777716224